
ஸ்ரீ திருவேங்கடநாதர் அருளிய,

கீதாச்சாரத் தாலாட்டு





பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதிஜி சாமிகள்



சுவாமி. சு. சதானந்தா



ஸ்ரீ குரு முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமி
திருமழபாடி மடாலய ஆண்டவர்



ஸ்ரீ கொங்கணசித்தர் திருக்கோயில்
ஊதியூர். காங்கேயம் வட்டம். திருப்பூர் மாவட்டம்

3-1

ஸ்ரீ திருவேங்கடநாதர் அருளிய,

கீதாச்சாரத் தாலாட்டு

திரு. **பூஜ்யஸ்ரீ தயானந்த சாமிகள்** அவர்கள்
நல்லாசியுடன்

உரை, மதிப்பு, வெளியீடு :
R. மாணிக்கம் (எ)
சுவாமி. சு. சதானந்தா
காட்டம்மன் புதூர், ஆச்சியூர் (Po) - 638 673.
தாராபுரம் வழி, திருப்பூர் மாவட்டம்.
செல் : 98659 65468

நூலின் பெயர்	:	**கீதாச்சாரத் தாலாட்டு**
நூல் வகை	:	**வேதாந்த உபதேசம்**
உரையாசிரியர்	:	**R. மாணிக்கம் [எ] சு. சதானந்தசாமி,** **தாராபுரம்.**
முதற்பதிப்பு	:	12–3–2015
தாள்வகை	:	18.6 கி. மேப்லித்தோ
நூல் அளவு	:	1 X 8
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	48
படிகள்	:	2000
விலை	:	ரூ. 30/–
பதிப்பகம்	:	*ஒவியா பதிப்பகம்* 7A, வடக்கு காளியம்மன் கோவில் தெரு, திண்டுக்கல் - 0451 - 2430309

ஹரி ஓம் தத்ஸத்! உ திருச்சிற்றம்பலம்!

சைன்யம் சாஸ்வதம் சாந்தம் வியோமாதீதம்
நிரஞ்சனம் நாதவிந்து கலாதீதம் தஸ்மைஸ்ரீ குரவேநமஹ!

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்அம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு!...

பாசம் அனைத்தையும் தனித்தனிப் பிரிந்திட நீக்கி
நேசமாகிய அறிவுரு நீ எனக் காட்டிப்
பேசும் ஏழ் வகைப் பிறப்புனக்கு இல்லைஎனப் பேசி
தூசு நீக்கிய சுயம்பிரகாசனைத் தொழுவாம்!.......

சிவமயம் குரு வாழ்க குருவே துணை

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

அணிந்துரையுடன் கூடிய சதானந்த சுவாமியின் வாழ்க்கை குறிப்பு:

சுவாமி அவர்கள் (1948 ம் ஆண்டு) விய வருடம் ஆடி மாதம் 5 ம் நாள் வியாழக்கிழமை மதுரை மாநகரில் திரு. க. ரங்கசாமி பிள்ளை சங்கரம்மாள் தம்பதிகளின் தவப்பயனாகத் தோன்றினார். உடன் பிறந்தோர் ஆண்கள் 5 பெண் ஒருவர் தந்தையாரின் பூர்வீக கிராமம் கம்பம் அருகில் உள்ள கருநாக்க முத்தம்பட்டி கிராமமாகும். சுவாமி அவர்களின் இயற்பெயர் திரு R. மாணிக்கம் என்பதாகும். சுவாமி அவர்கள் மதுரையில் ஆரம்பக்கல்வி பயின்றார். தந்தையார் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் தினந்தோறும் இரவில் மக்களுக்கு பல புராணக் கதைகளை எளிமையாக உபதேசித்து வந்தார். சுவாமி அவர்கள் சிறுவயதிலேயே தந்தை கூறும் உபதேச வாக்கியங்களை மனதில் ஆழப் பதித்து கொண்டார். தந்தையார் அவர்கள் சுவாமிகளின் 14ம் வயதில் இயற்கை எய்தினார்.

தந்தையார் பிரிவிற்குப் பின் சுவாமிகள் வீட்டிலிருந்து திருவருள் அழைக்க வெளியேறினார். சுமார் 4 ஆண்டு காலம் உணவகப் பணி. மின்வாரியப் பணி போன்ற பல வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தன்னுடைய 19ம் வயது இறுதியில் திருச்செந்தூர் கோவில் வளாகத்தில் ஞானி ஒருவரால் கருமஉபதேசம் 3 நாட்கள் செய்யப்பட்டது. அதன்பின் கருமஉபதேசம் செய்தவரை சந்திக்கவே இல்லை! இதன்பின் சுமார் 3 1/2 ஆண்டு காலம். திருமழப்பாடி ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகச சுவாமிகள் மடாலயத்தில் குரு சேவைப் பணியில் ஈடுபட்டார். இந்தக் காலகட்டத்தில் சுவாமிகளுக்கு வேதாந்த பாடத்தை புகட்டியவர்கள், கல்லிடைக்குறிச்சி ஆத்மானந்த சுவாமிகளும் இலக்கணம் ராமசாமி சுவாமிகளும் ஆவர். இவர்கள் காரைக்குடி கோவிலூர் மடம் தமிழ் வேதாந்த மரபு சார்ந்தவர்கள். சுவாமிகளின் மானசீக குரு திரு மழபாடி மடாலய ஆண்டவர் ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமி ஆவார்கள்.

திருமழப்பாடி மடாலயத்தில் பலதுறை சார்ந்த நூல்களைக் கற்றறிந்தார். இவைகளில் வேதாந்த நூல்களையே தனக்கு உகந்ததாக எடுத்துக் கொண்டார்.

அடுத்து பாத யாத்திரையாக 3 ஆண்டுகள் தமிழகத்தில் உள்ள புண்ணிய ஸ்தலங்களைத் தரிசனம் செய்தார். அன்னையைக் காண தன் பூர்வீக கிராமமான கருநாக்க முத்தம்பட்டிக்கு வந்தார். அங்குள்ள ஆன்மீக அன்பர்கள் சுவாமிகளின் வேதாந்த கருத்துக்களைக் கேட்டு இன்புற்றனர். அருகாமையில் உள்ள கிராம மக்களும் இதனால் பயனடைந்தார்கள். குறிப்பாக கம்பம் அன்பர் திரு. கஞ்ஷையன் அவர்கள் சார்பில் 5 நாள் 20 மணி நேரம் ஞான ஜீவவாத கட்டளை நூலை விளக்கம் செய்தார். சுவாமிக்கு நெருங்கிய தொண்டரும், நண்பருமாக ஆனார். பின் 2 ஆண்டுகள் சின்னமனூர் பூலாநந்தீஸ்வரர் திருக்கோவிலின் திருமுறை ஓதுவராகப் பணி செய்தார். 1982ம் ஆண்டில் தாயார் சிவபதம் அடைந்தார்.

தாயாரின் மற்றும் அன்பர்களின் வேண்டுகோளின் படியும் சுவாமி அவர்களின் 33 வது வயதில் பாண்டியம்மாள் என்ற பெண்ணை மணந்தார். 1983ம் ஆண்டிலிருந்து கம்பம் நகரில் குடியிருந்து, கடிகாரம் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டு இல்லறத்தை நல்லறமாக கடத்தி வந்தார். இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. பெயர் ரங்கநாயகி, 16 ஆண்டுகள் சிறப்பாக வளர்க்கப்பட்ட பெண்ணுக்கு திருமணம் நடைபெற்றது. 2000 ஆண்டில் சுவாமிகளின் வாழ்வில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. அம்மாவாசை அன்று மகள் அக்னிக்கு இறையானார். அடுத்த 15ந்நாளில் பௌர்ணமியில் மனைவியும் சிவபதம் அடைந்தார்.

ஆற்றொனாத் துயரில் மூழ்கி, செய்வதறியாமல் திகைத்து நின்றார். அற்றது பற்றெனில் உற்றது வீடு என்ற கருத்துக்கு இணங்க கைப்பொருளை எல்லாம் பயணம் செய்தே செலவழித்தார். இவ்வாறு நான்கு

ஆண்டுகள் சென்றன. இதன்பின் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகில் உள்ள பொன்னூதிமலை எனப்படும் ஊதியூர் மலைக்குச் சென்று கொங்கணர் சன்னதியில் 17 மாதங்கள் தனிமையில் இருந்தார். ஊதியூரில் திரு. சுப்பைய கவுண்டர், திரு V.K பழனிச்சாமி திரு. மணி டெய்லர் திரு. முதலியப்பன் பெருமாபாளையம், திரு. வேலுசாமி ஆகியோர் ஆன்மீகத் தொண்டாகள் ஆனார்கள். கொங்கனர் சன்னதியில் ஓர் ஒளி தன்னுள் செல்வதை உணர்ந்தார். ஊதியூர் கொங்கணர் சந்நதியில் இருந்த காலத்தில் 2005ல் ("நாநா ஜீவ வாதக் கட்டளை" எனும் வேதாந்த நூலை புதுப்பித்து வெளியிட்டார்) இந்த நூலை கோவை ஆணைகட்டி பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளிடம் அறிமுகம் செய்தபோது, அவர்களின் அனுக்கிரகத்தால் ரிஷிகேசம் சென்று 7 மாதகாலம் தங்கி இருந்து ஞானவாசிட்ட சாரமான, ஞானக்கதைகள் எனும் தலைப்பில் எழுதி பதிப்பித்தார். இந்த நூல் 2007–ம் ஆண்டு ஊதியூரில் விநாயகர் சதுர்த்தி விழாவில் பல பெரியோர்கள் முன்னிலையில் வெளியீடு செய்யப்பட்டது.

இதன் பின் 3 1/2 ஆண்டுகள் தாராபுரம் கொளிஞ்சிவாடியில் அன்பர் திரு. P. மருதப்பா ஆசிரியர் அவர்களின் இல்லத்தில் தங்கி இருந்து "திருவள்ளுவர் (குடும்ப) வரலாறு" எனும் நூலை எழுதி பதிப்பித்து, இதை வெளியீடு செய்வதில் திரு. Dr. C.K. செல்லமுத்து (Aircell Dealer.) அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தார். இந்தநூல் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் உள்ள வள்ளுவர் கழக மன்றத்தில் 2009ல் சிறப்பாக வெளியீடு செய்யப்பட்டது

2010 ஆம் ஆண்டு பரிமளா எனும் எங்களது இல்லத்தில் 16 வாரங்கள் "நாநா ஜீவ வாத கட்டளை" யும் தொடர்ந்து 16 வகுப்புகள் "கீதாச்சாரத் தாலாட்டு" நூலும் தொடர்ந்து வகுப்புகள் சுவாமி அவர்களால் நடத்தப்பட்டது, இது எங்கள் பாக்கியம்.

2010–11 பழனி அருகில் மானூர். தெய்வநாயக சுவாமி சன்னதியில் தங்கி இருந்து வேதாந்த பாடங்கள் 50 வாரங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது, இந்த வகுப்பு நடத்துவதற்கு மானூர் திரு. ராசுப்பிள்ளை அவர்கள் பெரிதும் ஏற்பாடு செய்தார்கள்.

2012ல் சுவாமிஜி அவர்களுக்கு ஆசிரமம் அமைக்க தாராபுரம் அருகில் காட்டம்மன் புதூரில் நிவேதா கார்டனில் 5 4/3 செண்ட் இடம் வாங்குவதற்கு தாராபுரம் திரு Dr. C.K. செல்ல முத்து, கி. கஞ்சையன் திரு. P. மருதப்பா, திரு. V. ராமமூர்த்தி அடியேன் திரு. N. ராஜேந்திரன் கபிலர்மலை ஸ்ரீ சாமி, அவர் புதல்வர் திரு. வேதகிரீஸ்வரன் ஆகியோர் பலரும் இயன்ற நிதி உதவி செய்தார்கள்.

2013 ல் கரூர் சின்ன வடுகபட்டி சப்தரீஸ்வரர் ஆராய்ச்சி நிலையத்தில் திரு. ஸ்ரீ சுவாமிகள், மற்றும் மகன் திரு. வேதகிரீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் வேதாந்த வகுப்புகள் 100 வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றன. (கபிலர் மலை ஸ்ரீ சாமி சித்த வைத்தியர் அவர்கள் சுவாமிக்கு பல ஆண்டுகாலமாக ஆப்தநண்பராக இருந்தவர். கபிலர் மலை ஸ்ரீ சாமி அவர்கள் 3 ஆண்டுகளுக்கு முன் இறைவனடி சேர்ந்து விட்டார்.

கரூரில் உள்ள ஆநிலையப்பர் கோவில்அருகில் ஐயப்ப சேவா சங்கத்தில் கண்ணுடைய வள்ளலின் "ஒழிவில் ஒடுக்கம்" என்ற ஆன்மீக நூல் சுவாமி அவர்களால் உரை எழுதி பதிக்கப்பட்டு, கபிலர் மலை திரு. வேதகிரீஸ்வரன் அவர்கள் ஏற்பாடுகளை கவனிக்கவே, வெளியீடு செய்யப்பட்டது.

கட்டிடப் பணிக்காக பல ஆண்மீக அன்பர்கள் உதவியால் சுமார் 12 இலட்சம் ரூபாய் நன்கொடையாக கிடைக்கப் பெற்றது. இதே சமயம் கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு 21–2–2013 ல் ஆசிரமம் ஸ்ரீ சங்கர சதானந்த நிலையம் என்ற பெயரில், திறப்பு விழா செய்யப்பட்டது.

பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளின் நல் ஆசியுடன் ஜெகத்குரு. ஸ்ரீ ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்த பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.

2014ல் காட்டம்மன்புதூர் ஸ்ரீ சங்கர சதானந்த நிலையத்தில் பகவத் கீதையின் தமிழில் மொழி பெயர்த்த மறு அவதாரமாக "பரமார்த்த தரிசனம்" எனும் சுவாமி அவர்களால் உரை நூலை எழுதி பதிப்பித்து எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. மேலும் மாதம் இரு முறை திரு மந்திரம் நூல் வகுப்பு நடக்கிறது 2015ல் "கீதாசாரத் தாலாட்டு" எனும் இந்நூல் வெளியிடப்படுகிறது.

அன்பர்கள், ஆன்மீகத் தொண்டர்கள் அனைவருக்கும் குருவருளும், திருவருளும் துணை புரிவதாக—

இங்ஙனம்

அன்பன் ல. ராஜேந்திரன் R. இந்திராணி, தாராபுரம்

சொல்லால் வருடம் குற்றம் சிந்தனை யால்வருந் தோடஞ் செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளா யவுமற்று
எல்லாப் பிழையும் பொருந்தருள் வாய்கச்சி ஏகம்பனே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஓம்!

முகவுரை : இக், கீதாச் சாரத் தாலாட்டு நூல் எமது பொழிப்புரையுடன் வரையப்பட்டுள்ளது. இதற்காக அடியவனின் ஸ்ரீ முகவுரை வருமாறு காண்க?

அன்போடும் அறிவு சார்ந்திலங்கும் வாசகப் பெரியோர்களே தாய்க்குலமே? ஆன்மீகத் தேடலுடைய பரிபக்குவத்தார்களே? ஏனையோர்களே? காரைக்குடி, கோவிலூர் மடம் தமிழ்வேதாந்த உபதேசம் பிறந்து வளர்ந்து பெருமை சேர்த்த மடாலயத்தில், 1845–ல் வருடம் தொடங்கி 1945–ம் ஆண்டுவரை பாடம் விரித்துணர்த்தி, பல ஞானத்துறவியர்களை உருவாக்கிய ஞான பீடத்தில் அமைந்தருளிய ஞானச் சாரியர்களால், போதிக்கப்பட்ட வேதாந்த வகுப்பு நூல்கள் 16 பதினாறில், இரண்டாம் பாடமாகக் கையாளப்பட்டு உபதேசிக்கப்பட்டுவந்ததே, இந்த கீதாச்சாரத் தாலாட்டு நூல் என அறியவும்.

இந்நூலுக்கு மூலமாவது? ஸ்ரீமத் வேதவியாசரால் ஒரு லட்சம் சுலோகங்களில் விரிவுரை செய்யப்பட்டது தான் ஸ்ரீ மகாபாரதம் எனும் காவியம், இவ்வளவையும், அருச்சுனனை முன்னிலைப்படுத்தி குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான், அந்த ஒரு லட்சம் சுலோகங்களின் சாரங்களையெல்லாம் ஒப்புரவு செய்து தத்துவோபதேசமாக வெறும் ஏழுநூறு சுலோகங்களாய் அருளிச்செய்துள்ளார். இதனையும், மதுரையில் தோன்றிய ஸ்ரீ பட்டனார் எனும் வேதோத்தமர் பழமையும் இனிமையும் எளிமையுமான, செந்தமிழில் மொழி பெயர்த்து, ஐநூற்றி 545–நாற்பத்தி ஐந்து கவிகளால், ஸ்ரீமத் பகவத்கீதை எனும், பரமார்த்த தரிசனம், எனும் தலைப்புடன் அருளிச் செய்துள்ளார், மேலும் இக்காவியார்த்தத்தை முறையோடு கற்றோர்கள் மட்டுமின்றி, மந்தமதியுடைய ஆண்பெண் இருபாலர்களும் எளிதில் விரைந்து உணர்ந்திட கவியில் நீலாம்பரி இராகத்தில் யாவரும் விரும்பும் வண்ணம் தாலாட்டுப் பாசுரமாக, 106 கவியில் (நூற்றிஆறு) அமைத்தும், தொட்டிலில் கிடந்து தூங்கும் குழந்தை அதனை கேட்டவாறு தூங்கியும், இளமையிலேயே அக்குழந்தை பூர்வீக ஞானம் அடைந்துய்ந்திடச் சாதமாகவே, விழுப்புரம் அருகில் உள்ள திருவாமாத்தூரினில் தோன்றிய ஸ்ரீ திருவேங்கட நாதர் அவர்கள் அருளிச்செய்துள்ளார்கள். இந்நூலுக்கு முன்பு பல பெரியோர்கள் பல்வேறு உரைகளை இயற்றியுள்ளனர். அவை எல்லாம் அன்றைய தமிழ் அறிஞர்கள் அறிந்திடச்சாத்தியமே அன்றி, தற்கால நடைமுறை தமிழ் கற்றபேருக்கு

எளிய தாய் அமைந்திடவில்லை ஆதலால், எளியேன் பெற்ற குரு அருளால் யாவரும் எளிதில் கற்று இன்புறும் வண்ணமாய், பொழிப்பு உரை (சங்கிலித்தொடரேபோல் ஞான விசயங்களைத் தொகுத்து) எழுதி இணைத்துள்ளோம்.

எனது, நீண்டகால நண்பராம், நாமக்கல் வட்டம், பரமத்தி வழி, கபிலர்மலை எனும் சீரூரில் அமைந்து இருந்து தம்மை நாடிவரும் வரியவர்களுக்கு, மணி மந்திரம் ஔஷதங்களால், பசி பிணி வறுமை சங்கடங்களை நிவிர்த்தித்து, சுகப்பிராப்தி செய்வதுவே கடமையாய், 60 அறுபது ஆண்டுகட்கும் மேலாய், தொண்டாற்றி, தனது 82–ம் அகவையில், விதேகமுத்தி எய்திய டாக்டர் ஸ்ரீ சாமி R.I.M.P அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு எமது நட்பின் நன்றிகூறும் எடுத்துக்காட்டுதலாகவும், அவரது ஆன்மா சாந்தி பெறுவதாகவும் கருதி உள்ளன்போடும் சமர்ப்பிக்கின்றேன்.

அன்பன், டாக்டர் S. வேதகிரீசுவரன் DSM, RMP, SMP அவர்கள் மறைந்த ஸ்ரீ சாமி அவர்களின் சிரேஷ்ட குமரனும், எமது சீடரும் ஆவார் என்று பெருமைபடச் சாற்றுகின்றேன். ஏனெனில் தன்னைச் சார்ந்தவர்களும் இனிப்பிறவாத பேரானந்த இயல்பினில் லயித்துப்பயன்பெற வேண்டுமெனக்கருதி தனது சித்த மருத்துவ (ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் எயிட்ஸ் ஆராய்ச்சி நிலையம் – சிட்கோ பின்புறம் – சின்னவடுகபட்டி கரூர்) வளாகத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், மாலை 7 to 9 மணிவரை, நாநாசீவவாதக் கட்டளையும், இந்த கீதாச்சராத்தாலட்டும், கைவல்ய நவநீதமும், என வேதாந்த வகுப்பு விரிவுரை செய்திடும்படி எம்மை ஈடுபடுத்திய பெருமையும் புகழும், ஸ்ரீ சாமி அவர்களின் தவப்புதல்வன் S. வேதகிரீசுவரன் அவர்களைத்தவிர, வேறு எவரும் இத்தமிழ் மாநிலம் முழுவதும் தேடினாலும், பயன் அடைந்தவர்கள் ஒருவரும் இருக்க முடியாதென உறுதியாகக் கூறமுடியும் எம்மால், ஒப்பரிய செயலால் உருவான இந்நூலையும் யாவரும் பெற்று வாசித்துணர்ந்து இன்புறுவீர்களாகவும் என, வாழ்வின் சுருக்க குறிப்பும் அணிந்துரையும் தந்துள்ள எமது அன்பர்கள் J, E, ஓய்வு – N இராஜேந்திரன் இந்திராணி அம்மாள் இருவரது குடும்பமும் மற்ற பிற அனைவரும், சர்வ நலமும் பெறுவதாகுக! என அமைவுறுகின்றோம்! சுபம்

ஓம் சாந்தி ஓம்!

இந்த மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி விழா நாயகர், டாக்டர், ஸ்ரீ சாமி அவர்களுடன், நான் இணைந்து வளர்ந்த சீரிய சுபமங்களமான சம்பவங்கள் அனேகமுண்டு உலகியல் காரியங்கட்கு எல்லாம் அப்பாற்பட்டது. முந்திய அனந்த சென்மங்களில் கொண்ட தொடர்பு தெய்வாம்சம் உடையது! சுருங்கக் கூறினால், இன்றைய எமது வளர்ச்சிகள் அனைத்தும், அன்றே எனது நண்பர் டாக்டர் ஸ்ரீ சாமி அவர்கள் உள்ளார்ந்து கருதியது என்றால் மிகையாகாது (இதிற்காணும் குறைகளை நீக்கி நிறைகொள்வதே வாசகர்களின் நியதி இதுவே எமது ஆசியும் கூட) எல்லாம் செயல்கூடும் என்னானை அம்பலத்தே!

<u>இக் கீதாச்சாரத்தாலாட்டு நூலின் ஆசிரியரின் வரலாறுச் சுருக்கம்</u>

இந்நூலாசிரியர் ஸ்ரீ திருவேங்கடநாதர் பிறந்த ஊர்தொண்ட மண்டலத்துள், விழுப்புரம் அருகே திருவாமாத்தூர் என்பதாகும், சமயக்குரவர்களால் பாடல்பெற்று விளங்கும் சிவஸ்தலமாகும், வைஷ்ணவ சம்பிரதாய மரபினர், எளிமையில் இனிமை சேர்த்த மாண்பினர், ஸ்ரீ மத் பகவத் கீதையை நாளும் பாராயணம் செய்து வந்து பயன் பெற்றவர், இவருக்கு இரண்டு பெண்கள் பிறந்து வளர்ந்து வதுவைப் பருவம் வந்தபோது, மூத்த பெண்ணை மதுரையிலும் இளைய பெண்ணை ஸ்ரீ ரங்கம் அருகேயும் திருமணம் செய்வித்தார், இளைய பெண்ணுக்கு வாழ்வில் எல்லா வசதி வாய்ப்புகளும் சேர்ந்திருந்தன. மூத்த மகளுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாமல் பலகாலமும் வருந்தி தந்தையிடம் தனது குறையை கூறிக் கண்ணீர் விட்டாள். அதுகண்ட திருவேங்கட நாதர், மரத்தினால் செய்யப்பட்டும் கண்ணைக்கவரும் வன்னமான ஸ்ரீ பாலகிருஷ்ணன் பதுமையை கொடுத்து, அம்மா குழந்தே அழாதே வருந்த வேண்டாம் இந்த திவ்ய மங்கள ஸ்வரூபனைத் தொட்டிலில் கிடத்தி இக் கீதாச்சாரத் தாலாட்டுப் பாசுரங்களைப் பாராயணம் செய்துவா? விரைவில், கொடுக்கும் கடவுளாகிய ஸ்ரீமத் நாராயணர் மங்களமே செய்தருளுவார் ஒவ்வொரு நாளும் இப்பாராயண முறைமையை செய் என அவ்விக்ரகத்தையும் இக்கீதாச் சாரத்தாலாட்டு பாசுரச் சுவடிக்கட்டையும் கொடுத்து அனுப்பினார்கள்.

பேதை மாது அப்பதுமையை, யசோதாவிடம் வளர்ந்த ஸ்ரீ கண்ணபிரானாகவே பாவித்து, தினமும் காலை மாலை என இருவேளைகளிலும் மாணிக்கத் தொட்டிலில், மணம் கமழும் மலர்களைப் பரப்பி அதன்மேல் அக்கிருஷ்ண விக்ரகத்தை மெல்லெனக் கிடத்தி, ரூபக தாளத்தில் நீலாம்பரி இராகத்தில், தன் தந்தை ஈந்திட்ட

கீதாச்சாரத்தாலாட்டு பிரபந்த பாசுரங்களை பாராயணம் செய்து வந்தாள், வரவே, சில திங்கள்களிலேயே, தாம் கருவுற்று உரிய காலம் வந்தபோது குழந்தைப்பேற்றினைப் பெற்று இன்புற வாழ்ந்து, வழுவாப் பெருநிலையாம் ஸ்ரீவை குண்டப் பதவியை எய்தினாள் என்பதே சிறப்பு மரபாகும். இதிற்கூரிய விதமாகவே நாமும் இந்நூலினை விருப்பத்தோடும் விடாமுயற்சியோடும் தினமும் தவறாமல் பாராயணம் செய்வோமாயின், வேண்டிய எல்லாம் பெற்று, சிறப்புடன் வாழ்ந்தும், சர்வ துக்கங்களும் நீங்கப் பெற்றுப் பரமானந்தப் பெருநெறியாம் மோக்ஷார்த்தத்தை எளிதே எய்தலாம் எனவே இந்நூலாசிரியரின் நெறிசார்ந்த கருத்தும் துணிவும் ஆசியும் ஆகுவதாம் என, அமைவு பெறுவோம்!

ஓம்! தத் ஸத்! சாந்தி சாந்தி ஓம்!

இது, இக்கீதாச்சாரத்தாலாட்டு நூலுக்கு மூலநூலான, ஸ்ரீமத் பகவத் கீதையை தமிழில் பெயர்த்த ஆசிரியர் ஸ்ரீ பட்டனார் இசைத்த சிறப்பு பாயிரம் (அநுபந்தம்) என்பதாகும்! அறுசீர்விருத்தம்.

பா—1 **ஐவகைப் பொருளும் நான்கு கரணமும் குணங்கள் மூன்றும்**
செய்வினை இரண்டும் ஒன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய்யிருள் அகல ஞானப் பொருட் கதிர் விரித்த புத்தேள்
கைவளர் ஆழிச் செங்கண் கண்ணைக் கருத்துள் வைப்பாம்!

இதன் – பொழிப்புரை.... ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், மண், முதலான ஐந்து மகா பூதங்களால், உண்டாகி விளங்கும் வடிவங்களும் இவைகளுக்கேற்ற பெயரும் அடைந்தும், அகங்காரம், சித்தம், புத்தி, மனம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும், சத்துவம், இரஜசு, தமசு, எனும் குணங்கள் மூன்றும், இகம்பரம் சார்ந்த, தீவினை, நல்வினை, இரண்டும், மெய்வாய் கண் மூக்குச் செவி எனும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வியானன், பிராணன், அபானன், சாமானன், உதானன் முதலிய வாயுக்கள் ஐந்தும், வாய் கைகள் கால்கள் மலக்கருவி, ஜலக்கருவி எனும், கருமேந்திரியங்கள் ஐந்தும், ஆக தூலவுடற் தத்துவங்கள் ஆறும், சூட்சுமவுடற் தத்துவங்கள் இருபதும், சீவனும் அவித்தையுமான, காரணவுடற் தத்துவங்கள் இரண்டும், என்ற முப்பத்தி ஐந்து தத்துவங்களுடனும் கூடிப் புணர்ந்து, இங்கு இதுவே சத்தியமெனத் தேர்ந்து இருமாந்து, சிந்தனை தெளிவின்றிக் குழப்பத்தால் மயங்கி, தாம் பிறந்தது முதல் சூரியனைக் காணாதப் பிறவிக் குருடனைப்போல், அறியாமை இருளகன்றதும் ஞானத்தினைத் தரிசித்ததே போல், இந்தச் சீவர்கள்,

பொய்ப் புணர்ச்சி புசிப்பு மயக்கங்களிலிருந்து விடுபடவும், வீடுபேறு எனும் மோக்ஷகதியினை எளிதில் விரைவாக அடைந்துய்யும்படி, நீலமேனியும், பவளநிறவாயும் செந்தாமரையை ஒத்த கண்களும், சங்கும், சக்கரமும், கெதையும், அபயமும் கொண்ட நான்கு திருக்கரங்களுடனும் திகழும், திவ்ய மங்கள ஸ்வரூபனாகிய ஸ்ரீ கண்ணபிரானை நம் கருத்துள் நிறுத்தி சதாகாலமும் வணங்கிப் புகழ்ந்து போற்றி, சர்வ துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பேற்றினையும் பெறுறுய்வோமாகவும்! என்பதாகும்.

இது இந்நூலாசிரியர் தாம் செய்ய முயன்ற கீதாச்சாரத்தாலாட்டு நூலுக்கு இசைத்த சிறப்புக் (பாயிரம்) காவியப்பாயிரமாகும்.

பா—2 **மதையர்கோன் வேதம்நவில்வாய் வேங்கட நாதன்**
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள்—கீதை யைக்
கருத்துயர் தாலாட்டடாய்க் கட்டுரைத்தான் யாவரும்
கருத்துயர் தீர்ந்தெய்தக் கதி!...

இதன் – பொழிப்புரை: திருவாமாத்தூரினின் வாழ்கின்ற மாநுட சமுதாயத்தினருக்கெல்லாம் திருவருட் பேறு நெறியினைப் போதிக்கின்றதில் ஆச்சாரியத் தலைமையுடையவராயும். அநுதினமும் வேத பாராயணம் செய்கின்றவராயும், மெய்ப்பொருளை விளக்கிக் கூறுகின்ற வாய்மையுடையவராயும், திரு வேங்கடநாதன் எனும் (பெயரை) திருநாமம் கொண்டவராயும், குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் எதிரிகளை கொன்று வெற்றி பெறப் போரிடும் அர்ச்சுனனுக்கு, ஸ்ரீ கண்ணபிரான் உபதேசித்தருளிய பகவத் கீதையின் ஞானாமிர்தப் பொருளை, இங்குள்ள மாநுடரினம் முழுதும் கற்றுத் தேர்ந்து தெளிந்து, பிறப்பு இறப்பு என்கிற தொடர் நோய்த்துன்பங்கள் யாவும் நீங்கி அனைவரும் சர்வானந்தப் பிறவிப் பயனை மோக்ஷகதியினை அடைந்துய்வதற்கென்றே, இந்த கீதாச்சாரத் தாலாட்டு, எனும் ஞானார்த்தப் பதிக்கத்தை ஓதி உருவாக்கி அர்ப்பணித்துள்ளேன். எனக் கூறுகின்றார்! கடந்த இரண்டு சிறப்புக் கவிகளையும் தொடர்ந்து கீழே வருவது எல்லாம், கீதாச்சாரத்தாலாட்டு நூல் தொடர்கிறது, என அறிக?

பா– 3 **சீராரும் பரமார்த்த தரிசனத்தை அருள் செய்யப்**
பேராரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ?.......

பொ—உரை: ஜென் மாந்தரங்களாய் செய்து வந்த பயன்கருதாப் புண்ணியங்கள் எல்லாம் ஒருமித்து நின்றிலங்கும் தீவிரதரப் பக்குவனாகிய அர்ச்சுனனுக்கு, பிறவிப்பயனாகிய மோக்ஷாத்த ஞானம் சித்திக்கும் படிக்கு

சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்யம் எனும் பதமுத்திகளை வழங்கும் பெருமை பொருந்திய ஞானச்சாரியராக, ஸ்ரீமந் நாராயணரே குருமூர்த்தியாக எழுந்தருளி வந்தனராம்? – (என்றவாறு)

பா–4 திருத்தேரில் சாரதியாய்ச் சேர்ந்திருந்தும் கீதையினால்
அர்ச்சுனர்க்கு மெஞ்ஞானம் அனைத்தும் உரை செய்தவரோ?

பொ–உரை : சித்திரங்களின் வேலைப்பாடு மிகுதியும், பொன்னாற்கவசமும் ஒலிபரப்பும் மணிகளுடனும் இணைக்கப்பட்டு, உச்சைஸ்வரம் போன்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்டு, காண்போரின் கருத்தை எல்லாம் கவரும்படி உறுதிமிக்க தேரில் போரிட நிற்கும் பார்த்தனுக்கு அத்தேரை வழி நடத்தும் சாரதியாய் அமைந்திருந்து, சரியை கிரியை யோகம் ஞானம் எனும் பரமார்த்த ரூபமான உபதேசகலையை திருவாய்மலர்ந்து உபதேசம் செய்தவரோ?

பா–5 செஞ்சமரில் பந்துஜனம் சேதம் வரும் என்றிரங்கி
அஞ்சினவன் பயம் தீர்த்தே அமர்செய்யச் சொன்னவரோ........

பொ–உரை : சம்பிரதாய நெறிபிறழாத யுத்தம் ஆனாலும், உறவினர் குரு படைவீரர்களாகிய மக்கள் அனைவர்க்கும் உடலுக்கும் உயிர்க்கும் சேதம் வருமே, என்று அஞ்சிமனமிரங்கிப் புலம்பியிருந்த பார்த்தனின் ஆசாபாசங்களையும் அச்சத்தையும்? கர்மம் பத்தியோகம் ஞானம் முதலான உபாயங்களை உபதேசித்து நீக்கி, எதனாலும் பின்னடைவு இல்லாமல் யுத்தம் செய்வதே சத்ரியதர்மமாகும் நீயும் யுத்தம் செய்வாயாக என்று அருளிச்செய்த பகவானோ நீர் (என்றவாறு) ....

பா–6

சுற்றம்அறிற் சோக மெனச் செல்லினைச்சற்றும் அறிந்தவன்போல்
கற்றுணர்ந்த பேரதனாற் கலங்கார்காண் என்றவரோ....

பொ:உரை குரு உறவினர் படைவீரர்கள் மக்கள் முதலியோர்கள் எல்லாம் சற்றே தரும நீதி கருமநூல்களின் பயன்களை ஆராய்ந்து தெளிந்தவன் போல் கூறுகின்றனையே? வருணாச்சிரம தர்ம கர்ம பாவ புண்ணியங்களை குருவினிடம் முறையாகக் கேட்டுணர்ந்த ஞானவான்கள்! இதனால் சற்றும் கவலைப்பட மாட்டார்களே? அது உனக்கு தெரியாதோ என திருவாய் மலர்ந்தருளிய பகவானோ நீவீர்! (என்றவாறு)

பா–7 கலங்காரோ இறப்புவரில் கற்றுணர்ந்த பேரேனும்
அலங்காமல் நானிருக்கும் வகையுரையும் எனவினவ

பொ–உரை: பகவானே! குருமுன்பாக ஆத்மார்த்தமான பிரம்ம வித்தையை

கேட்டு நன்குணர்ந்த ஞானிகளும், இது போன்ற பசிபிணிபோர் மரணங்களினால் உண்டாகும் நாசம் கருதித் துன்பமடையார்களோ? அப்படி ஆனால் அந்த மனஞ்சலியாத கரும அதீதமான யுக்தி புத்தி தந்திரங்களை, அடியவனுக்கும் உபதேசித்து எனது அறியாமை அச்சம் துக்கங்களையும் போக்கிட, அருளிச் செய்வீர்கள் சுவாமி என அர்சுனன் பணிந்து வணங்கி விண்ணப்பம் செய்தான் – (என்றவாறு)

பா–8 நீயும் நானும் புவிமேல் நிருபர்களும் மெய்யுணர்வால்
ஆயும் கால் பிறந்திறப்பது யார்க்குமில்லை என்றவரோ......

பொ–உரை: பார்த்திபா? பாமரன் பண்டிதன் ஞானி அஞ்ஞானி நீ நான் என்ற அனைவரது ஆத்மனும், உண்மை ஞானத்தால் தன்னுள் நாடி, தீர விசாரித்து ஆய்வு செய்திடும்போது, புசிப்பதும் நிகழ்த்துவதும் சுகிப்பதும் துக்கிப்பதும் இறப்பதும் நமது உண்மைப் பொருளான ஆத்மாவுக்கு, இல்லவே இல்லை என்று அருளிச்செய்த கண்ண பகவானே அவர் (என்றவாறு)

பா–9 ஈங்கெவர்க்கும் பிறந்திறப்பது இல்லை என்றீர் இவ்வுலகை
நீங்கும்பவம் யார்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லும் என,

பொ–உரை : பகவானே பாமரர் பண்டிதர் சர்வதா மாநுடர்களும் இங்கு நானும் ஏன் தாங்களும் கூட, பிறந்து இவ்வுலகை அநுபவித்த பேர்களும் இறந்ததும் இவைகளைத் துறந்தவர்களும், பிறப்பும் இறப்பும் அதனால் வரும் சுகதுக்கங்களும் இல்லை என்றீர், அப்படியின்றி இவ்வுலகில் பிறந்தும் வாழ்ந்தும் இறந்தும் மக்களினம் நிகழ்கின்றனவே, அது எப்படி எதற்கு யார்யார்க்கு எதனால் நிகழ்கின்றன? இம்மாயக் கூத்தினை அடிமை விபரமாய் அறிந்திடவும், உறுதிப் பொருளினை உள்ளவாறு உபதேசித்தருளுவீர் ஐயனே என்று கேட்டனன் விசயன் (என்றவாறு)

பா–10 இத்தரையிற் பிறந்திறப்பதற்கு எடுத்தவுடற்கு அடுத்தபொறி
நித்தியமாகிய ஆன்மா நின்சொரூபம் என்றவரோ

பொ–உரை : பரந்த பாருலகின்மேல் யாவர்க்கும் இசைந்து வந்த உடலே பிறப்பதும் இறப்பதுவுமாய் இயல்பினதாய் நிகழ்கின்றன, ஆயினும் இவ்வுடலை நடத்தும், கரணம், பொறி, வாயு, கருவிகளின் தன்மையது, அதுவும் உண்மையல்ல, நீயாகிய ஆன்மாவே நாசமில்லாத சத்திய வஸ்து என கருத்திலிருந்தித் துணிவாய் என்று உபதேசித்தவரோ...

பா–11 அங்கம்உயிர் இந்திரியம் நான் அன்றிவேறு எனைக்காணேன்
இங்குயான் வேறுஉண்டேல் எனக்கு அறியப்புகலும் என

பொ—உரை: எம்பெருமானே! இங்கு என்னை, இந்தப்பருமனாகிய உடலையும் அந்தக்கரணம் வாயுக்கள் ஞானக்கருவிகள் தொழிற் கருவிகள் என்று மட்டும்தான் நானாகக் கண்டுள்ளேன் அன்றி, இவைகட்கு அந்நியமாக நான் என்ற ஒன்று எனக்குள் இருப்பதாக அறியவில்லை, இவைகளுக்கு அந்நிய ஒரு பொருளாய் நான் இருப்பது உண்மையானால், நின்னைச் சரணமடைந்த அடிமை அறிந்துணரும்படி புகன்று அநுக்கிரகிக்க வேண்டுமென அர்ச்சுனன் பிரார்த்தித்தான் என்றவரோ

பா—12

மெய் உயிர் இந்ரியங்கள் அல்லால் வேறுஅறியேன்
என்றவனைப், பைய அவையால் அறியப் படானும் நீ என்றவரோ.........

பொ—உரை : அநுபவங்கள் ஏதும் அறிய மாட்டாதக் குழந்தையைப் போன்றவனே? தூலம் சூட்சுமம் காரணம் என்ற மூன்று உடல்களாலும் (5=5) பத்து வாயுக்களினாலும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற கரணங்கள் நான்கினாலும், மெய்வாய் கண் மூக்குச் செவி என்கிற ஞானப்பொறிகளாலும் வாக்கு கை கால் மலக்கருவி ஜலக்கருவி எனும் தொழிற்கருவிகளாலும் உன்னை அறிந்திட முடியாது, ஆனாலும் இவைகளைக் கொண்டே உன்னை நீ அறிந்திடலாம், காரணம் அவை எல்லாம் ஒரோர் பொழுதிருந்து அழியும் சடம், நீயோ சச்சிதானந்த கணப் பிரம்மம் எனவூகித்து உள்விசாரித்து உணர்ந்து தெளிந்தறிவாய் என்று அருளிய பகவானாம்!

பா—13 தேகம்வேறு ஆகில் அதைச் சேர்ந்ததிவன் ஏதெனவே
சோகமே விளைகருமத் தொடர்ச்சியினால் என்றவரோ.........

பொ—உரை: எனது சரீரம் வேறு நான்வேறு ஆகுவதனால், இந்த சரீரத்தை அடைந்திட்ட வகை எவ்வாறு என்று அர்ச்சுனன் கேட்கவும், துன்பமாய்த் தொடரச்செய்த கருமகாரியங்களின் மேல்வைக்கின்ற ஆசை அபிமானத்தால், இப்படி சரீரங்களை எடுத்துவரும் என்று அறிவாயாக எனப் பகவான் ஸ்ரீ கண்ணபிரான் கூறி அறிவினரே!

பா—14 தேகம் எடா முன்கருமச் செயல்வருமாறு ஏதெனவே
ஏகமாம் மரமும்வித்தும் எனும் முறைபோல் என்றவரோ....

பொ—உரை : சரீரம் (உடல்)வருவதற்கு கரும பலன்களே காரணமானால் எனது இந்த சரீரம் எடுப்பதற்கு முன்னமேயே, அக்கரும பயன் வந்துள்ளது என்பது எப்படி எனக் காண்டீபன் கேட்கவும், இதன் கூறுபாடுகளின் வகைகள் அனந்த விதமானதால், மரம் முந்தியதா விதை முந்தியதா?

இதன்விடை புதிராகும் புரியும்படி விளக்கிட இயலாத அநாதி, முறைமை என அமைவுகொள்வாய் என்றவாரம்

பா—15 காயமும் தானும் பிறிதேல் கன்மம் எவர் செய்ததென தியஉடற்கு அல்லாது கன்மச் செயல்தனக்கு ஏதுஎன்றவரோ....

பொ—உரை: நானும் எனது சரீரமும் வேறுவேறு ஆனால், இதில் கர்மகாரியங்களைச் செய்தவர்யார் என பற்குணன் கேட்டதனால், கருமங்களினால் பயன்களை தேகமே அநுபவிக்கும் அஃதல்லாமல் சத்சித்தானந்தமான தனது ஆத்மாவுக்கு அவ்வநுபவம் பொருந்திடாது என்று உபதேசித்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவனாம்!

பா—16 படர்கருமம் உடல் செய்யில் பலமுறுவது யார்க்கென்னவே அடர்பலமும் உடற்கேயாம் அறிவார்க்கு ஏதென்றவரோ.....

பொ—உரை : அநேகமாய் விரிந்த காரியங்களை தேகம் செய்யும்போது? இக்கருமங்களின் பலமான பயன்பாடுகளை அநுபவிப்பது ஆன்மாவர்? உடலா? என்று பார்த்திபன் கேட்கவும், உன்னை வந்தடைந்த பயன்கள் எல்லாம், சரீரவாதையைச் சென்று அடையுமே தவிர அவ்வுடலையும் அக்கருமங்களையும் சாக்ஷியைபோல் கண்டுகொண்டிருக்கின்ற ஆன்மாவுக்கு சேருமோ? சேராது, என மயக்கம் நீங்கியிருப்பாயாக என்றருளியவராம்!

பா—17 வெய்யவினை உடற்கென்றால் மெய்இங்கே விழ ஆன்மா ஐயம்அற நரகசொர்க்கம் அநுபவிப்பது ஏதெனவே

பொ—உரை : புண்ணிய பாவ கருமபயன் உடலுக்கே என்று அருளினீர்கள், இத்தேகம் பிணமாகி இங்கேயே வீழ்ந்து அழிகின்றன, இத்துடன் கரும பயன்கள் தீராமல், அத்தேகம் தாங்கி நின்ற ஆந்மாக்கள், யாதொரு சந்தேகமும் இல்லாமல், சொர்க்கத்தையோ அல்லது நரகத்தையோ கண்டிப்பாக அநுபவிக்கும் என்று சில சான்றோர்களும் சாத்திரங்களும் கூறுகின்றனவே அது எக்காரணத்திலாம்? என்று பார்த்தன் கேட்டனனே

பா—18 அநுபவமே இல்லையதுவீண் ஆரோபிதம் நிகழ்த்திற்று தநுகரணச் செயல்தனதாய்ச் சார்வதுபோல் என்றவரோ

பொ—உரை : சொர்க்க நரக அநுபவம் என்பது ஓர்போதும் ஆந்மாவுக்கு உண்டானதில்லை, ஆயினும் அது கூறும்போது, ஆரோப(கற்பனை)மாய் வந்தமாயாஜாலம் அதெப்படி எனில், நினைத்தவுடன் ஆணையிடும் அதிகாரியாகிய அந்தக்கரணங்கள் ஏற்றுச்செல்லும், இப்படி கருமமும் பயனும் அதன் பயன்களை அந்தக்கரணங்கள் ஏற்றுச்செல்லும், இப்படி

கருமமும் பயனும் உடலும் மனமுமாய்ச் சார்ந்து மறையும், இதுவும் கற்பனைவகை முறைமை தான் என நீ விசாரித்துணர்ந்து தெளிவாயாக என்றருளியவரோ

பா—19 மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்கம் ஏதெனவே
முற்றுணர்வு ஒன்றில்லாத மோகமென்று சொன்னவரோ

பொ—உரை : என்னிலிருந்தும் வேறாகவுள்ள சரீரங்களின் தொழில்களும் பயன்களும் அது வீழும்போதே ஒழியாமல், ஆன்மாவாகிய என் மீது வந்து சார்ந்தது எவ்வாறு எனக்கேட்ட அர்ஜீனனுக்கு, ஏகமேதானானதும் பரிபூரணமானதுமான பன்மை ஞானம் உனக்குச் சித்திக்கவில்லையதனால், இப்படியான மயக்கம் (அஞ்ஞானம்) வந்தென்று நீ அறிந்து தெளிவாய் என்றனராம்.

பா—20 அறிவு தேகந்தனக்கோ ஆந்மாவிற்கோ எனவே பிறிவு
செய்யில் அசித்துடலம் பிரம்மம் அறிவு என்றவரோ..........

பொ—உரை : அறிவுமயமாகிய ஞானம் என்பது எனது உடலுக்கானதா அல்லது நானான ஆன்மாவிற்கா உரைத்தருளும் சுவாமி எனக் கேட்ட பார்த்தனுக்கு, ஆமாம், உடலையும் மனத்தையும் உற்று நீ ஆராய்ந்து காணும்போது, உடல்வெறும் சடம் (உணர்வற்றது) அசித்து, ஆத்மாவே உணர்வுள்ள சித்து(அறிவு)மயமாம் ஆன்ம ஞானம் தான் (பிரம்மம் என்று அருளியவராம்)

பா—21 தேகம்அசித்து ஆகில்இந்தச் செயல்வருமாறு ஏதெனவே
ஏகபரம் சோதியின்முன் இருக்கையினால் என்றவரோ.......

பொ—உரை : உணர்வற்ற இத்தேகத்துக்கு நடத்தல், கிடத்தல் எழுதல் போகுதல், வருதல் முதலிய கருமங்களை எவ்வாறு செய்கின்றவாம் என்று வினவிய(கேட்ட) அர்ச்சுனனுக்கு, சூரிய ஒளியினால் கிளிஞ்சல், (அதாவது கண்ணாடித்துண்டுகள் மின்னுவது போல) வியாபகமாய் பரவிநின்ற ஞானப்பிரகாசமான ஆன்மாவின் அருகில் இசைந்திருப்பதனால், அவ்வாறாகிய காரியங்கள் நிகழ்ந்துள்ளன என யூகித்துத் தெளிந்து நீ கொள்வாயாக என்று உபதேசம் செய்தனராம்!

பா—22 இருக்கினும் அசேதனத்துக்கு இச்செயலுண்டோ எனவே
உருக்குபடாக் காந்தமுன்னில் ஊசிநிகர் என்றவரோ

பொ—உரை : இவ்வுரையை சூசி கடாக நியாயம் என்று உபநிஷத்துக்கள் புகலும், அதாவது காந்தமும் ஊசியும் சேரும் விதம் என அறியவும். சரீரம் ஆத்மாவை சூழ்ந்து நின்றிருந்த போதும், கல்(சிலை)போன்று

சடமானவுடலுக்கு கொடுக்கல் வாங்கல், நடத்தல், கிடத்தல் முதலிய கிரியைகள் உண்டாகுமோ என்ற விஜயனுக்கு, அக்நியால் காய்ச்சப்படாத காந்தக்கல் முன்பு வைக்கப்பட்ட இரும்பூசிகள் விரைந்து ஒன்றிடும் தன்மைபோல, சித்ரூபமாகிய ஆத்மாவை அணுகிய உடலுக்கும் அதன் வீரியவித்தைகள் பொருந்தி நிகழ்த்திடக் கூடுமென அறிவாயாக? (என்றருளினராம்)

பா–23 சொன்ன செயல் உடற்கானால் சுகதுக்கம் யார்க்கெனவே அன்னசுகந் துக்கமுந்தான் அவ்வுடற்கே என்றவரோ.....

பொ–உரை : தாங்கள் முன்பு கூறிய நன்மை தீமைகளைத் தருவிக்கின்ற வினைகள் தேகத்திற்கே ஆனால், இதனால் வரும் பயனை இன்பமும், துன்பமும் யாருக்கு? (எதனை)ச் சேருகின்றன என்ற பற்குணனுக்கு, அவ்விதமாய் வந்த சுகமும், துக்கமும் அவ்வுடற்கே அன்றி, அறிவு வடிவாயுள்ள பிரம்ம(ஆந்மா)த்திற்கில்லை எனத் தெளிந்து நீ துணிந்திருப்பாயாக என்றவராம்

பா–24 சேதனமாம் ஆந்மாவை சேராத துக்கசுகம்
ஓதும் சடமாம் உடலை உற்றிடுமோ சொல்லுமென......

பொ–உரை : அறிவே வடிவமாகிய ஆன்மாவைப் பொருந்திடாத துன்பமும் இன்பமும் அநுபவிப்பதற்கு இடமாகிய சரீதத்தை, சடமாகியவுடலைச் சேர்ந்திடுவதுதான் எவ்வாறு எனக்கேட்டு(பற்குணன்) பணிந்து தொழுது அருளிச்செய்வீராக என்றனனே?....

பாடல்–25:

பூதம் ஐந்தோடு ஐந்துயிர்கள் புலன்கள் பத்தும் மனமுதல்
நான்கும் ஈதிருமெய் இதில் மனத்துக்கு இன்பதுன்பம் என்றவரோ........

பொ–உரை: மண் நீர் நெருப்பு காற்று வெளி எனும் பூதங்கள் ஐந்தும், கலந்து ஒருமித்து வந்து தோன்றும் தூலவுடலோடும், இதனை நடத்த இசைகின்ற, வியானன் பிராணன் அபானன் சமானன் உதானன் என்ற வாயுக்கள் ஐந்தும், சப்தம் பரிசம் ஒளி சுவை நாற்றமெனும் புலன்களைத் தருவிக்கின்ற ஞானக்கருவிகள் ஐந்தும், கொடுக்கல் வாங்கல், நடத்தல் முதலான காரியங்களுக்கு உபயமாகின்ற தொழிற்கருவிகள் ஐந்தும், இவைகளோடுங்கூடி நடத்துகின்ற அதிகாரிகளான மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்கும், இந்த இருபத்திநான்கு தத்துவங்களும், ஸ்தூலம் சூட்சுமம் (அதாவது, காண்பது உணர்வது என) இரண்டு உடல்காளாகும் இதில், மனத்திற்கு (சூட்சும உடலுக்கே) தான் இன்ப துன்பம் வந்து பொருந்துவதாகும் என அறிவாயாக என்றருளியவராம்

பா–26 இந்தஇரு வகைத்தநுவிற்கு ஏதுவுஏது எனவே
முந்திய காரணம் அதனால் மூன்றுதநு என்றவரோ...........

பொ–உரை : இவ்விதமான தூலம் சூக்குமம் எனுமிரண்டு உடல்களும் தோன்றுவதற்கு யாது காரணமாயிருந்தது எனக்கேட்ட விஜனுக்கு இவையிரண்டும் தோன்றவும் ஒடுங்கவும் இடமாகியு மூலமாம் காரண சரீரத்தோடும், உடல்கள் மூன்றாகச் சாத்திரங்கள் புகன்றுள்ளன என்பதுவும் நீ அறிந்து கொள்வாய் என்றனராம்!

பா–27 மனம் அறியும் துக்கசுகம் வரவென்றீர் அம்மனமும்
வினவில்,அசேதனமல்லவோவிரித்து எனக்கு விளம்புமென...........

பொ–உரை : நினைப்பு மறதியால்வரும் இன்பதுங்களில் விசயங்களை எல்லாம் அந்தக்கரணங்களே அறிந்திடும் என்றீர் சுவாமி? அவ்வாறு ஆகும் மனமும் நூடி நுணுகி விசாரித்து அறியும்போது சடம் அல்லவோ? இந்தச் சடமாகிய மனம் சுகதுக்கங்களை எவ்வாறு பெறுகின்றன என்பதை, தங்களின் அடிமைக்கு விரிவாகக் கூறுங்கள் பகவானே என்று அர்ச்சுனன் கேட்டனனே

பாடல்–28 அம்மனத்தில் ஆந்மா அபேதம்போல் தோன்றுதலால்
விம்முதுக்க சுகத்தைமனம் மேவுமென்று சொன்னவரோ......

பொ–உரை : முன்பு கூறிய அந்த மனத்தினிடத்திலே அறிவுருபமாகிய ஆன்மா வேறுபாடின்றி ஒன்றாகுமாறு தோற்றுவதால், மிகுதியான இன்பதுன்பங்களை மனம் பொருந்திடும் என்று ஸ்ரீ கண்ணபிரான் உபதேசித்தனராம் (என்றவரோ)

பா–29 அந்தமனோ துக்கசுகம் அதனிடத்தும் நில்லாமல்
வந்திலங்கும் ஆன்மாவை மருவியதென் சொல்லும் என ....

பொ–உரை : முன்பு கூறப்பட்ட அந்த மனத்தினில் தோன்றிய இன்ப துன்பங்கள் அம்மனத்தினிடமே நில்லாமல் அடர்ந்து நெருங்கி வந்து இணைந்து விளங்கும் ஆன்மாவைத் தழுவியதென்ன விதமாய் எனவிளக்கியுரைத்து அருளுவீர் சுவாமி என்று காண்டீபன் கேட்டனனாம்,

பா–30 வெய்யக்கனலின் சூடு மேல்வைத்த சட்டியினூடு
உய்யபுனல் ஊடுவந்தங்கு ஒன்றுதல்போல் என்றவரோ....

பொ–உரை : அடுப்பினுள்ளே கொளுத்தப்பட்ட அக்கினியின் மேல் வைத்த சட்டியினுள்ளே, ஊற்றிவைத்த தண்ணீரிடத்தே மெல்லவே தாக்கிய நெருப்பின் வெப்பத்தால், சட்டியினுள் விடப்பட்ட தெளிர்ந்த நீர் கொதித்து வெண்ணீராகுவது போல என்றருளிய பகவானாம்

பா–31 சித்தாகும் ஆன்மாவும் சடமாகும் சித்தமும்தான்
ஒத்தாங்கே இரண்டும் ஒன்றாய் உற்றவகை சாற்றும் என.......

பொ–உரை : சித்ரூபமாயுள்ளதும் அறிவே இயல்பாயுள்ளதுமான ஆன்மாவும், சடவடிவாயும் உணர்வியலில் நிலையில்லாததுமான சித்தமும் என்கின்ற இவ்விரண்டும், வேறுபாடற்று ஒற்றுமையாய் இணைந்திடும் விதம் எப்படி எனக்கூறி அருளுவீர் சுவாமி எனஉவிஜயன் கேட்டனனே?

பா–32 வல்லிரும்பு கனலுடனே மிருவியதுபோல் மனமும்
ஒல்லையில் ஆந்மாவுடனே உற்றதுகாண் என்றவரோ.........

பொ–உரை : வன்கடினமான இரும்பும் தீயில் சேர்த்து காய்ச்சிய போது, இளகி தகதகவென அத்தீயினது தன்மையே ஆய்விடுவது போல, சடமாகியமனமும் அறிவுரூபமாயுள்ள ஆந்மாவும் வேறுபாடின்றி ஏகமாய்த் திகழ்ந்திடுமது காண்பாயாக (என்றருளிய ஸ்ரீ பகவானே!.........)

பாடல்–33 உற்றது எதனால் எனவே உள்ளம் அவிவிவேகமுறப்
பற்றியதன் மேலுமதன் பண்புவந்தது என்றவரோ..........

பொ–உரை : ஆத்மாவாகப் பொருந்திய தன்னிடத்தேயும் மனத்தின் சுபாவதர்மங்களாகிய, சுகம், துக்கம் ஆசைகோபம் விருப்பு, வெறுப்பியல்புகள் வந்து இணைந்தது எதனாலென்று கேட்ட பார்த்தனுக்கு, அது இது எது எவ்வாறு என்று காரணமாகி நிற்கும் விசாரணை விவேகமில்லாத அவிவேகத்தால் தான், அம்மனத்தின் தன்மாதன்ம சுபாவங்கள் வந்து பொருந்தியது எனத் தெளிந்திடுவாயாக என்றருளிய பகவானாம்!

பா–34 அடுத்தகுணம் போமோபின் ஆத்மாவை விட்டெனவே
எடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறுதல்போல் என்றவரோ.......

பொ–உரை : உள் முகமாய் நேத்திரத்தினால் காண முடியாமல் அக மனத்தினுடைய சுபாவதர்மப் பண்புகளை எல்லாம், எனது நிஜவடிவாம் உண்மைஞானம் அநுபவம் வந்த பின்பு என்னைவிட்டு அகன்றிடுமோ? என கிரீடியானவன் விண்ணப்பிக்கவும், செடியினின்று பரித்தெடுத்த செம்பருத்திப் பூவினது நிறத்தை அப்படியே ஸ்படிகத்தின் (கண்ணாடியின்) முன்பு வைத்தபோது அதனை அப்படியே காட்டிடும் அவ்வாறு இதுவும் தோற்றிடும் என்றருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவானாம்........ இவ்விரு கவிகளையும் இரத்தப் படிக நியாயம் என்பார்கள் வடநூலார்கள்.

பா–35 சுத்தப் படிகம்போல் சொரூபமாய்த் தானிருக்க
மெத்தவும் ஆசாமலினம் மேவியதென் சொல்லுமென.........

பொ—உரை: யாதொரு களங்கமும் அற்ற வெண்மையான பளிங்கினைப் போன்றதான தனது ஆன்ம சச்சிதானந்த வடிவாய்த் தானிருக்கவும் ஆசாபாசங்களாகிய குற்றங்கள் அடர்ந்து வந்து எனது ஆத்மாவினிடத்தே பொருந்திய காரணம் எவ்வாறு என்று அர்ச்சுனன் பிரார்த்தித்து நின்றனனே........

பா—36 அநாதியாம் வாசனையால் அடைந்ததாம் ஆசாமலினம்
மனோபந்தம் இருக்கின்முத்தி வாராதென்று உரைத்தவரோ...

பொ—உரை : முன் பல சென்மங்களில் செய்த கருமங்களின் இயல்புகள் வாசனைபோல் (ஆசாபாச நினைவுகள்) இன்னவிதமாய் வந்ததென்று கூறமுடியாதபடி, வந்து ஆத்மாவை பற்றி நின்று மறைத்திடும் அதனால், பந்த பாசங்களே பரந்து நின்று நிசவடிவான ஆத்மாவை மறைத்திடுவதால், முத்தி நிலையான மோக்ஷம் சித்திக்காது என அறிந்து கொள்வாயாக என்று ஸ்ரீ கண்ணபிரான் உரைத்தனரே! என்றவாறு

பா—37: பந்தம்எது முத்திஎது பகுத்துரைக்க வேண்டுமென்தன்
சிந்தை தெளியவென்று திருத்தாளினை வணங்க .....

பொ—உரை : வாசனாரூபமான பந்தம் எது தியாக மயமாய் வரும் முத்திஎது? இவைகளை, எனது சிந்தை தெளிவாகக் கவர்ந்திருத்திக் கொள்ளுமாறு,விளக்கி உபதேசத்திருள வேண்டும் எனப் பிரார்த்தித்து வணங்கினான் (உபயதிருப்பாதங்கள் இரண்டையும் முறையாகத் தொழுதனன் பார்த்திபனே)

பா—38: தேகாதி தான்எனவே சேருமபிமானங் கள்பந்தம்
ஆகாத மானம் விடில் அரியமுத்தி என்றவரோ

பொ—உரை : தூலம் சூக்குமம் காரணம் ஆகிய சரீரங்கள மூன்றின்அவஸ்தைகளையும், இதனால் நிகழும் ஞானேந்ரிய கர்மேந்ரியங்களையும், பிராணமயம் அன்ன மயம் மனோமயம் விஞ்ஞான மய கோசங்களையும், இவைகளின் தொழிற்சார்பு சங்காதங்களில், நான் என தென்றும் வைத்திடும் அபிமானம் (பந்தத்தில் அழுந்துவது) சேர்ந்துவரும் காலம் வரை (இதுவே வாசனாமலம்?) பந்தமாகும், இப்பந்த குணம் தான் மோக்ஷநிலையை அடையவிடாமற் தடைசெய்யும், சற்சங்கசார்பு, சாஸ்திரப் பாடங்களில் விருப்பம் சற்குரு உபதேசம் என மூன்றின் சம்பத்துக்கள் சேரும்போது, பகுத்துணர்வு பிறந்தவுடன் அரிதான மோக்ஷநிலை கைகூடும் என ஸ்ரீ பகவான் அநுக்ரகம் செய்தனரே

பா—39 அபிமானம் வரும் வகையும் ஆங்கதனைத் தீர்வகையும்
தபியாமல் நானறியத் தயவாகக் கூறுமென

பொ—உரை: தேகங்களாலும் பிராணாதிகளாலும் அன்னாதி கோசங்களாலும் வாசனாமலதோஷப் பந்தங்கள் என்னை வந்தடைந்த தன்மையினையும், இவ்வபராதமான பந்தங்களை தீர்க்கின்ற வழிவகைகளையும் நிவித்திக்கத் தக்கபகவானே, இவ்விரண்டும் என்புத்தியில் படுமாறு விரித்து உரை செய்யுமென்று விஜயன் கேட்கவும், இவ்விரண்டும் உன்னிடம் வந்தது இருந்தது தீரப்போயது என்ற அஞ்ஞானத்தை நீக்குவாயாகில் அப்போதே அரியமுத்தி என்று ஸ்ரீ கிருஷ்ணன் கருணையோடும் உபதேசித்தனரே!

பா—40 மறந்திடும் அஞ்ஞானத்தால் மானம் வந்தது அஞ்ஞானம்
இறந்துவிடில் மானமும்போம் என்னவுரை செய்தவரோ

பொ—உரை : சச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவை (தற்கொலை செய்ததே போன்ற மறதியே) அஞ்ஞானம் மறக்கச்செய்கின்றது. பின்னும் தேகபோக சுகங்களினின்றும் மனத்தை வேறுபிரித்து நிராசை பெறவும் நிவர்த்தியாகிவிடும் தானே? என்று அருளிச்செய்த ஸ்ரீ பகவானாம்!

பா—41 அந்தமுறை அஞ்ஞானம் அநுகுவதும் போவதுவும்
சந்தயம் இல்லாதறியத் தயவாகக் கூறுமென

பொ—உரை: முன்பு தாங்கள் அருளியபடியே அந்த அஞ்ஞானம் என்னை வந்து அடைந்தவிதமும் பின்பு இது நீங்கிடும் விதமும், எனக்கு யாதொரு சந்தேகமும் உண்டாகாதபடி, கருணையோடும் உணர்த்தி உரைத்து திருவாய் மலர்ந்து அருளுமென விண்ணப்பித்து வணங்கினான் விஜயன்

பா—42 அஞ்ஞானம் வந்தது அநாதியது சொல்வது அல்ல
மெஞ்ஞானம் அத்தாலே விடுமென்று சொன்னவரோ.........

பொ—உரை : ஆத்மாவினிடத்து அவ்வறியாமை முன்னமேயே உள்ளது அந்த அஞ்ஞானம், அது இடையில் வந்து இருந்து போனது என்று சொல்லுவது உண்மை இயல்புக்கு பொருத்தமிராது, இதனை அநிர்வசனியம் என்பர் சான்றோர், ஆயினும் நமது முந்திய ஞானம் உதித்தபோது (சாதனாதிபயனுடன் சாத்திரார்த்தங்களில் தேர்ந்த ஆராய்ச்சியும், குருபக்தி விசுவாசம் அவரது தத்துவ உபதேசத்தால் உண்மை ஞானம்) அஞ்ஞானம் நீங்கிடும், அன்றி யாதொரு கருமங்களாலும் அச்சந்தேகாதிகள் நீங்கிடாது என்று உபதேசித்து அருளிய பகவனாம்.

பா—43 இரவிஎதிர் அடுத்துவந்த இருள்போல அஞ்ஞானம்
வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை ஏதெனவே.......

பொ—உரை: இருளானது சூரியன் ஆட்சியுள்ளபோது தன்னைக்காட்டிக்கொள்ளாமல், சூரியன் அஸ்தமனமான பின்பு உடனே இருள் மூடிக்கொள்வது போல் ஞானாதித்தனாகிய என்னை இவ்வஞ்ஞானயிருள் வந்து சூழ்ந்து கல்விக்கொள்வது ஏன், இதற்கும் எனக்கும் இது நியதியோ? என்ற காண்டீபன் இம்முறைமை தகாதது அன்றோ? சூரியனை இருள் எவ்வாறு சென்றடையும் எனக்கேட்டனன்

பா—44 அந்தஅறிவு வந்தால் அஞ்ஞானம் இல்லை அப்பால்
சந்தமும் ஆனந்த சாகரம்காண் என்றவரோ

பொ—உரை : சுயம்பிரகாசமாகிய ஆந்மாவில் அஞ்ஞானமாகிய இருள் ஒரு காலமும் வந்து அநுகாது என்ற திடமும் தெளிவும், மூலமான அறிவும் உண்டான அப்போதிருந்தே தொடரும், அப்போதே சதாகாலமும் ஆனந்தக்கடல்வடி வே. ஆவாய், என நீ யூகித்துணர்ந்து அறிந்திடுவாயாக, சூரியன் தன்னிடத்தே இருள் எங்ஙனம் இருக்க முடியும் இராததுபோல் நீயும், என்று உபதேசித் அருளிய ஸ்ரீ கிருஷ்ண பகவனாம்!

பா—45 வேதாந்தத் தால்குருவால் மெஞ்ஞானம் வந்தவுடன்
தீதானதுக்க சுகம் துராதது ஏதெனவே

பொ—உரை : ஞானாச்சாரியரது ஞானோபதேசத்தாலும் திடமான அபரோக்ஷ ஞானம் உண்டாகத்தக்க அத்யாத்ம சாஸ்திர விதிப்பூர்வமாக ஞானார்த்தங்களை கேட்டிருந்தும், அக்கணமே அஞ்ஞானம் நாசமாயிடும் இப்படியிருக்க மீண்டும் தீமையை உண்டாக்குகின்ற இன்பதுன்பங்கள் யாவும், நிவிர்த்தியாகாதிருப்பது யாது காரணம் என்று அர்ச்சுனன் கேட்டனன்; காரணம் கெட்ட பின்னே காரியம் ஏன் வந்தது?

பா—46 பற்றறுமோ துக்கசுகம் பரோட்க்ஷ ஞானத்தலே
அற்றமாம் அவ்விரண்டும் அபரோட்க்ஷத் தென்றவரோ......

பொ—உரை : சரியை கிரியை யோகமுறைகளை கூறும் சாத்திர ஞானங்களும் ஞானேந்திரிய கர்மேந்ரியங்களால் சம்பாதித்த பரோட்க்ஷ ஞானத்தால் அஞ்ஞானம் நீங்காமலிருக்க, இதன் சம்பந்தமான இன்ப துன்ப வாசனைகள் அறிந்து அநுபவிக்கின்ற ஞான காரியங்கள் எல்லாம் சாக்ஷிமாத்திரமாய் உள் நின்று உணரப்படும்! அந்த அபேராக்ஷ ஞானத்தினாலே தான் சுகதுக்க அநுபவ சம்சாரக் கூட்டங்கள் அறவே கெடும் என்று ஸ்ரீ பகவான் திருவாய் மலர்ந்தருளினரே!

பா—47 பரோட்சம் அபரோட்சம் எது பகுத்துரைக்க வேண்டும் என்தன்
திரோதமாம் புத்திநன்றாய் தெளியும்படிக் கெனவே....

பொ–உரை : சுவாமி பரோட்சம் அபரோட்சம் என்பது யாது இதன்பதமும் பொருளும் என்பதேது? தங்களைச் சரணமடைந்த அடியேனின் புத்திக்குத் தெளிவுண்டாகும் விதம் விளக்கி அருள வேண்டும்! அர்ச்சுனன் மீண்டும் வணங்கிக் கேட்டனனே....... என

பா–48 பகர்ந்த சத்த ஞானம் பரோட்க்ஷம் அநுபவத்தால்
அகம்பிரமம் எனும் ஞானம் அபரோக்ஷத் தென்றவரோ

பொ–உரை: சாத்திரங்களைப் படிப்பதால், இவைகளின் உட்பொருளைப்பற்றிய விளக்கங்களை குருமூலம் கேட்டதனால், தீர்த்தம் ஸ்தலம் மூர்த்தி வழிபாடு தரிசனம் மற்றும் பிராணாயாமம் முதலிய பயிற்சிகளினால் பெறுகின்ற ஞான அநுபவங்கள் எல்லாம் பரோட்க்ஷ ஞானமாகும், இவைகள் அனைத்தும் தனக்கு அந்நியமானவை? ஆயினும் இவைகளின் அநுசரணைகளோடும் இவை கட்கு அந்நியமாய் யாதொன்றினாலும் மறைக்கப்படாமல் சுயம் சோதியாய் தனது சச்சிதானந்த சொரூபமாயுள்ள ஆத்மாவை! திரிவின்றி தரிசித்திருப்பதே அபரோக்ஷ ஞானமாம் எனத் தெளிவு பெறுவாயாக, என்றுபதேசித்தனர் ஸ்ரீ கிருஷ்ணரே!

பா–49 தான்பிரமம் என்றறிந்தும் தநுவைத்தான் என்ற புத்தி
ஏன்போக இல்லையதை எனக்கறியப் புகலுமென

பொ–உரை : அனைத்திற்கும் ஆதாரமாய் யாதினாலும் கெடாததாய், யாதினுக்கும் இதம் செய்வதான சச்சிதானந்த பிரம்மமே தான்! என்று அபரோக்ஷமாக அறிந்துணர்ந்த பின்னும், சரீரமே தான் என்றும் உயிர் உடமைச் சார்புகளை என்னது என்றும் முன்போலவே, தோற்றுகின்றதே இவ்விபரீத பாவனை அநுபவங்களை அடியவனுக்கு உரைத்தருளும் சுவாமி என விஜயன் கேட்டனனே?

பா–50 கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்தயோ கங்களினால்
ஆழ்பிரமத்து அநுபவம்வந்து அதுதீரும் என்றவரோ.......

பொ–உரை : பலசென்ம வாசனையால் விரிவடைந்த தேகாத்மபுத்திகளின் தொடர்ச்சி ஏன் ஒழியவில்லை என்றால், ஆறுலிங்க பதார்தங்களைக் குருமுன்புகேட்டும், கேட்ட பொருளை மனத்தினால் அடிக்கடி (சதாகாலமும்) பாராயணம் செய்தும், இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி எனும் அடயோகங்களின் பயிற்சியாலும், தனக்குள் நின்று உணர்ந்து அறியப்படும் துவம்பத சீவசாக்ஷியான கூடஸ்த பிரம்மத்தைத், திடமாய் அறிந்துள்ள பாவனை

நீங்கா (சீவ)மல் நின்றதே (த) அபரோக்ஷஞானம்! அக்கணமே நாமரூப காரியகாரண ஞானவிருத்திகள் அனைத்தும், (வானில் விண்மீன்கள் பிரகாசிக்கும், ஆனால் சூரியன் உதித்தவுடன், விண்மீன் பிரகாசங்கள் பயனற்றதாகும் அதுபோல இவ்விசயார்த்தங்களை நீ யூகித்து அறிந்திருப்பாய் என்று கிருஷ்ணர் உபதேசித்து அருளினரே!.......

பா–51 ஆதியாம் சித்சொரூபம் ஆகாததால் இனிமேல்
சோதிமனன ஆதியினால் சொரூபம்ஆமோ எனவே.......

பொ–உரை : முதன்மையாய் உள்ள சச்சிதானந்தஸ்வரூபம் இதற்கு முன்பே எனக்குத் தெரிந்து அநுபவிக்கும்படி தரிசனமாகவில்லை, தாங்கள் கூறியருளும் சிரவணசாதனாதி, பிராணாயாமதி அப்யாசங்களினால் இனிமேல் உணர்வுரூபமான பிரம்மாத்ம ஞானம் அடைவது கூடுமோ? இது சித்தசுபாவத்தாலா அல்லது கர்மங்களின் செய்கையினாலா, இதில் அது எதனால் அடையப்படுகிறது? எனக் காண்டீபன் கேட்டனனே......

பா–52 எப்போதும் சிந்மயம்தான் எனல்மறந்து தேடுவது
செப்புமிடற்று அணியிருக்கத் தேடுதல்போல் என்றவரோ...

பொ–உரை : அர்ஜீனா? இதனைக் கண்ட சாமீகர நியாயம் என்று உபநிஷத்துக்கள் கூறும்! வந்ததும் இருந்ததும் போனதும்–அதாவது நேற்று இன்று நாளை – இந்த மூன்று காலத்தின் சூழலையும் அறிந்து கொண்டிருக்கும் சச்சிதானந்த சொரூபமான ஆத்மாவே தான் எனும், துரிய வடிவை மறந்துவிட்டு, அந்த மூன்றுக்குள்ளேயே தேடுவது? இதனால் வந்ததே அஞ்ஞான சந்தேக விபரீதக் கூட்டங்கள், பிரியமாய் தான் அணிந்திருந்த சொர்ணவைர ஆபரணத்தைப் பெட்டிக்குள்ளே தேடிக்காணாமற் புலம்பி ஆர்ப்பரித்தபேதை போல? கழுத்தில் உள்ளதைப் பெட்டிக்குள் தேடி தொலைந்துவிட்டதாக பாவித்துப் பதறும் பழக்கம் மூடக்கொடுமை அல்லவா? இங்கே தேடவேண்டும் தீர விசாரித்து விடையும் பொருளும் பெற வேண்டும் என்பதே, தெளிந்த விவேகியின் செயல் என்று அறிந்திடுவாய் என ஸ்ரீ பகவான் அருளிச்செய்தனராம்

பா–53 தேடியபின் தேகபுத்தி தீர்ந்துபோய்ச் சித்சொரூபம்
கூடுவனோ யான்என் குறைதீரச் சொல்லுமென..........

பொ–உரை : ஆண்டானும் அடிமையும் போலவா எனும் ஐயம்? கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனும் சாதனாதிகள் மூலம் விசாரித்து அறிந்து தேடிய பின், நான் எனது எனும் அகந்தையும் தேகாத்ம புத்தியும் என்னைவிட்டு ஒழிந்திடுவதும், இதன் பின் உணர்வே வடிவாம் எனது ஆத்ம சொரூப

பத்தினைச் சார்ந்திடுவனோ! என் தெளிவின் நிறைவின்மையை போக்கிட நித்ய திருப்தியை யான் அடையும்படி, அருளுரை செய்திடுங்கள் பகவானே! எனப் பார்த்திபன் தொழுது வணங்கினனாம்.....

பா–54 வந்தவுடல் வேறாயும் வாசனையால் தான் எனலால்
சந்தயம்என் தன்சொரூபம் தானாதற்கு என்றவரோ....

பொ–உரை: சிந்தையும் பேச்சும் செயலும் இவைகளால் வந்த பயன்களும் அறிவே சொரூபமான எனக்கு அந்நியமாய் இருந்தும், முன் அனேக சென்மங்களில் பழகி இசைந்து வந்த நினைவுத் தொடர் வாசனையால் இவைகளை எனது ஆத்மா என்று திடமாய்க் கூறிவந்ததனால், இவைகளின்றும் விடுபட்டு நான்? என்று எனது நிஜசொரூபத்தை தரிசித்துய்வனோ? இந்த சந்தேகக் குழப்பத்தை இக்கணமே விடுவாயாக? விட்டவுடனே உன்னை நீ உள்ளபடி அறிந்து கொள்வாய் இதில் ஏதும் ஐயமில்லை என்றே அறிக? என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான்! கூறியருளினாராம்

பா–55 தநுவைத்தான் எனும் பிரமை சத்தஞானத்தில் அறாது
அநுபவமெஞ் ஞானத்தால் அறும்வகை ஏதுரையும்என.........

பொ–உரை : சந்தேகவிபரீத மயக்கத்தால் பூதகாரியமான உடல்களையே தான் என அறிந்திருந்த (சப்தவாசாஞானாகாரமாய்) பரோக்ஷ ஞானத்தால் சிந்தித்திருந்த ஆன்மா நீயன்று, இச்சட வடிவங்கட்கு (சரீரத்திற்கு) வேறாய், எல்லாவற்றிற்கும் சாக்ஷியாய் துலங்கும் அறிவுருபமய ஆன்மாவே நான், என்றபோது, அவைகள் அனைத்தும் நாசமாய் ஒழியும் என்பது எக்காரணத்தினால்? (இது, அஞ்ஞானம் நீங்கச் சமானமான விரோதி? இன்மையால் நீங்கவில்லை என்ற கருத்தாய்) என்று பார்த்திபன் விண்ணப்பித்து வணங்கி நின்றான்?

பா–56 விளக்குவிளக்கு எனுமதனால் வெய்யஇருள் போய்விடுமோ
துளக்கமில்லா விளக்கேற்றில் தொலையுமிருள் என்றவரோ......

பொ–உரை : இருளில் நின்று தம்கையில் ஏற்றப்படாத வெறும் விளக்கை வைத்துக்கொண்டு வெளிச்சம் விரும்பினோர், தீபம் இதோதீபம் என்று ஓலமிட்டாலும், அவ்விருள் நீங்கிவிடுமா? பித்தனே? போகாது, பின் எதனால் போகுமெனின், தீபம் எண்ணை திரி இட்டு தீசேர்த்தால் அது எரிந்ததும் அடர்ந்து சூழ்ந்துள்ள இருள் முற்றும் நாசமாய் ஒழியும், இதுவே இதற்கு (இருள்நீங்கச்) சமானவிரோதியாம், இருள் என்றது பரோட்ச ஞானாபிமானக் கூட்டுறவுகள், விளக்கு என்றது. தனது எதார்த்த வடிவான அறிவு ரூப ஆத்ம தரிசனமாம்! அபரோக்ஷஞானத்தை

என்றுணர்ந்துய்வாயாக (இதனை அபரோக்ஷப் பிராந்தி என்றும் கூறுவர்) என்று, பார்த்திபனின்தேருக்கு சாரதியான ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்தருளினரே!

பா–57 நெடுங்காலம் ஆன்மாவை நீங்காத அஞ்ஞானம்
விடுங்காலம் எந்நாளோ மெய்ஞானத் தாலெனவே

பொ–உரை : பன்னெடுங்காலமாய் அனந்த செனனங்களிலும் விலகாமல் சச்சிதானந்தமயமான எனது ஆத்மாவைப் பொருந்தியிருந்த அறியாமையானது தத்துவ அபரோக்ஷ ஞானத்தினால், நீங்கிடும் காலம் எந்தக் காலத்திலோ? தங்களின் அடிமைக்குத் தெரிவித்தருள வேண்டும் பகவானே, இப்படி நீண்ட காலமாய் எனைத்தொடர்ந்த அஞ்ஞானம் இன்னும் நீண்ட கால ஞானாப்யாசத்தால்தான் தீருமோ எனப்பற்குணன் கேட்டனனாம்

பா–58 அந்தகாரமும் குகையில் ஆயிரம்நாள் இருந்தாலும்
செந்தீபம் கண்டவுடன் தீர்வதுபோல் என்றவரோ

பொ–உரை : மலையினூடுள்ள குகைக்குள் காரிருள் அனேகமாயிரம் நாள் சூழ்ந்திருந்தாலும் (அக்குகை தோன்றிய காலம் முதல்) சுடரும் பிரகாசம் பொருந்திய தீபத்தை ஏற்றிய அக்கணத்திலேயே, யாதொரு தாமதமும் இன்றி அவ்விருள் தோன்றாமல் ஒழிந்திடுமது போல, அநாதி சென்மங்களாய் தொடர்ந்திருந்த அஞ்ஞானக் கூட்டங்கள் அனைத்தும், தத்துவ ஞானம் உதயமான அந்தக்ஷணத்திலேயே, யாதொரு தடையுமின்றி நாசமாயிடும் என ஸ்ரீ பகவான் அருளிச் செய்தனராம்! அநாதிகாலம் முதல் கூடவே தொடர்ந்த அஞ்ஞானம் நடுவுநிலை எனும் சமகால ஞானத்தால் எதுவும் எஞ்சாது முற்றும் நிவிர்த்தியாகும் எனவாம், இதனை அந்தகார தீபரிசன நியாயம் என்பர் – நியாயம் – என்பது – உவமானம்)

பா–59 கருமயோ கம்தவமே காரணமாய் நீங்காமல்
அருமையாம் ஞானம்வந்தோ அஞ்ஞானம்போம் எனவே.....

பொ–உரை : அவித்தைக்கு மூலமான அஞ்ஞானாதிகளான (பாவம் புண்ணியம், யோகம் பிராணாயாமம், எக்ஞும்யாகம் தவம் கிருச்சிர சாந்திராயனாதிகள் சகல கருமங்களாலும் தானதர்மங்களாலும் போக்க முடியாத அஞ்ஞானம், சராசரி மாநுடர் எவரும் அடைவதற்கு அரிதாகின்ற திட அபரோட்க்ஷ ஞானம் உண்டான பின்னரோ நிவர்த்தி ஆகும்? வியந்து மனத்தினால் செய்யப்படும் கருமங்களால் நீங்காமல், அபரோக்ஷமாஞானத்தால் ஸ்ரீ கிருஷ்ணரிடம் நயந்து வணங்கிக் கேட்டனன் மனத்தினால் செய்யப்படும் கருமங்களால் நீங்காமல், அபரோக்ஷஞானம்

உண்டான பின்னரே நீங்குவது யாது காரணத்திலாம் என்று கேட்டனன், விசயன்.

பா—60 குத்தும்வெட்டும் படைகளினால் கூடுமோ இருள் துறக்க
உத்தமாம் இரவி உதித்தால், ஓடுமிருள் என்றவரோ....

பொ—உரை : குத்தி எம்புதற்குரிய கடப்பாரையும் வெட்டுவதற்கு உதவிடும் மண்வெட்டி, அரிவாள் பிக்காச்சி ஈட்டி முதலிய ஆயுதங்களால் போராடினாலும் அவ்விருளை ஒட்டி அப்புறப்படுத்துதலாகுமோ? ஆகாததுதானே இவ்வீண் வேளையை விட்டு விடு? பின்பு எப்படி இவ்விருள் நீங்கிடும் எனில் உலகவுயிர்கள் அனைவர்க்கும் பெரும்பயனை வருவிக்கும் சூரியன் உதித்தால் எவ்வாறு உடனே அக்கொடிய இருள் நீங்கி ஒழிந்திடாதோ? இதனை நன்குணர்ந்திடுவாயாக, என்று ஸ்ரீ பகவான் அருளிச்செய்தனராம்.......

பா—61 அஞ்ஞான, இருள் துக்க, அறியாத நல்லகர்மம்
மெஞ்ஞாலம் தனைப்புரக்கும் விதமெவ்வாறு என வினவ.....

பொ—உரை : இரசோகுணரூபமய அஞ்ஞான இருளை நிவிர்த்திக்க இயலாத பாவ புண்ய தானதர்மயோக ஏக்ஞாதிதவங்கள், இச்சத்தியமாயிலங்குகின்ற பிரபஞ்ச உலகவிவகார காரியங்களை மாத்திரம் எவ்விதமாகப் பராமரித்துப் பேணுகின்றன? இதன் இரகசிய தந்திரம் எவ்வாறு பொருந்தி உள்ளன என்று அர்ச்சுனன் விண்ணப்பித்தனன்

பா—62 இந்திர ஜாலம்போல இவ்வுலகை நம்மிடத்தில்
தந்திரமாய்த் தோற்றுவித்தோம் சத்தியமல்ல என்றவரோ

பொ—உரை : வித்தைகாட்டுபவனின் வித்தையால் தோன்றி இருந்து மறைந்துவிடுகின்ற பொய்ப்பதார்த்தங்கள் போல, இவ்வுலகியல் கருமங்களை எல்லாம் எமது அகத்துள்ளே மனதின் தொழிலைவிட வேறாய் மனாதீதமெனும் புத்தி சாமர்த்தியத்தினால் சத்தியமில்லாததை புறத்தே சத்தியம் போல செய்தும், அகத்தே அது அறவே இல்லாமல் ஞான திடபாவனை செய்யும் இரகசிய ஞான கர்மாநுபவம் எனவும், பொய்தோன்றிட மெய்யே ஆதாரம், அம்மெய்யின் நிழலே நாம ரூபகாரியமாகி வந்த இப்பிரபஞ்சம் என அறிந்து கொள்வாயாக என்று ஸ்ரீ பகவான் அருளிச்செய்தனராம்.

பா—63 மித்தை எனும் சகத்து நின்பால் விளங்கிடுமோ என வினவ
சுத்திதனிலே இரஜிதம் தோன்றுதல்போல் என்றவரோ

பொ—உரை : சாத்திர சுருதிகளும் அநுபூதிமான்களான தீர்க்கரிசிகளும் ஞானிகளும், எக்காலமும் இல்லாத சுத்தப்பொய் என்று கூறிய பிரபஞ்சநாமாதி ரூபகாரியங்களும், சச்சிதானந்த நிர்மல நிர்விகாரியான உன்னிடத்தில் உண்மையில் விளங்கிடுமோ? என்று விஜயனுக்கு சமாதானமாய், நேத்திரத் தோற்றம் மாத்திரமாய், சிப்பியினிடத்தில் வெள்ளி தோன்றுவதுபோல, தோற்றுவதே அன்றி, ஒருக்காலும் சிப்பி(கிளிஞ்சல்)யில் வெள்ளி இல்லவே இல்லை அது போல, சத்தியப் பிரம்ம ரூப ஆத்மாவினிடத்தில், இப்பொய்யாகிய சகத்துத்தோன்றுவதாய்க் காணுதல் ஆகும் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதுக்ரகம் செய்தருளினரே!

(இதனை, சுத்திகா இரஜித நியாயம் என்பர் மேலோர்)

பா—64 அயல்வெள்ளி சுத்திதன்மேல் ஆரோபிதம் கூடும்
இயல்புள்ள சகமும் முன்வேறு இருந்ததும் உண்டோ எனவே

பொ—உரை : வெள்ளி அல்லாது வெள்ளி போலத் தோன்றுவதற்கு கற்பனைக்கு கிளிஞ்சல் – எ.சிப்பியே ஆதாராமாய் கிடந்தது, ஆத்மா என்பது இப்பிரபஞ்சம் முழுதும் புணர்ந்து பரிபூரணமாய் நிறைந்திருந்தும் இதனை அடியேன் காண இயலாதவாறு (புலப்படாமல்) துலங்குகின்றது, சத்தியத்தன்மையும் உண்மையியல்புமுடைய சாயலும் – நிழலும்–கொண்டு திகழும் உலகியல்கள் முழுதும் கற்பனை சொரூபம், இதற்கு முன் இக்காரண காரியங்கள் எல்லாம் முதலாயுள்ள இப்பொய்ப் பிரபஞ்சத்திற்கு மூலப் பிரபஞ்சம் ஏதாவது இருந்தது உண்டோ என்று ஸ்ரீ கிருஷ்ணரிடம் பார்த்திபன் பிரார்த்தித்து விண்ணப்பம் செய்தனனாம்

பா—65

மனமயக்கம் பிடிக்கில் இல்லா வஸ்துவும் தோன்றிடும் அதுவோ
கனவில் விண்ணில் தான்பறக்கக் கண்டதுபோல் என்றவரோ..

பொ—உரை : ஆசைமயக்கம் தேட்டம் விருத்தியாகும்போது ஓர் காலத்திலும் இல்லாதவஸ்து – பொருள் – இருப்பதாகத் தோற்றும் வெறும் கற்பனை மாத்திரமே, அது எப்படி எனில் விழிப்புக்கும் நல்லுறக்கத்திற்கும் இடையில் தோன்றிடும் கனவில், தான் பறவையைப்போல விண் வெளியில் பறந்திருந்தவாறு கண்டது ஒத்ததே! என, ஸ்ரீ பகவான் திருவாய் மலர்ந்து அருளிச்செய்தனராம்.

பா—66

கனவுபோற் பிரபஞ்சம் என்றீர் கண்விழித்தால் கனவுபொய்யாம்
வினவுஞ்சகம் தினமும் மெய்யாய் விளங்குவதென் சொல்லுமென...

பொ–உரை : நீர் சொப்பனத்தில் கண்ட உலக நாம ரூபங்கள் எல்லாம் விழித்துக்கொண்டபோது பொய்யாய்க் கண்டதுபோல என்றருளிச் செய்தீர்கள் இந்த உவமை எனக்கு விளங்கவில்லை ஐயனே, கனவில் கண்டது விழித்தெழுந்தபோது பொய்யே... இந்த விழிப்பு நிலைமையிலேயே கண்டநுபவிக்கின்ற சகல சகப்பொருட்களும் எப்போதும் சத்தியமாகவே தோற்றுகின்றனவே? அது என்ன காரணத்திலாம் என்று நான் புரிந்து கொள்ளுமாறு, தேவரீர் அநுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று பணிந்து காண்டீபன் கேட்டனனாம்

பா–67 மெய்யாக விளங்குவதும் மெஞ்ஞானம் வரும்அளவும்
பொய்யாம்பின் கனவதுபோல் போதம்வரில் என்றவரோ

பொ–உரை : மெய்ப்பிரம்ம சாக்ஷாத்காரமான ஆன்மா அபரோக்ஷஞானம் உதயமாகியதில் உறுதியுணர்வு கொள்ளும்வரை இப்பொய்யாய்த் திகழும் பிரபஞ்சம் முழுதும் சத்தியமாகவே தோன்றிடும், இதுவும் பின், ஆன்ம போதம் (அறிவு–ஞானம்) உதித்து அதன் தியான ஒருமையில் திடம் பொருந்தி நின்றபோது, இதுவரையும் உனக்கு சத்தியமாய்க் கண்ட உலகியல் அநுபவம், இப்போது சத்தியமல்லாத தாய் உன் உணர்வினின்றும் நீங்கிவிடும் என, அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருளிச் செய்தனராம்!

பா–68 முன்புகண்ட கனவுபொய்யாம் முழிசாக்ரம் போலஎன்றீர்
பின்புமுத்தி தசையடைந்தும் பிரபஞ்சம் நிற்பது ஏது எனவே

பொ–உரை : கனவிலிருந்தும் விடுபட்டு கண்விழித்துக்கொண்ட வியவகாரிக (விழிப்பு எனும் சாக்கிராவஸ்தையில் (அவஸ்தை– காலத்தின்போது) முன்புகனவில் கண்ட உலகியல்மயமான இப்பிரபஞ்சம் முழுதும் பொய்யே ஆகும் அதுபோல, எல்லாவற்றையும் சீர்தூக்கி அறிகின்ற விழிப்புநிலையில் சகமெல்லாம் பொய் என்று அருளினீர்கள் பின்பு, திட ஞானம் பெற்று முத்தி நிலையை எய்திய பின்னரும் இவர்க்கு உலக காரியங்கள் அதன் வாசனைகள் எல்லாம் முன்போலவே சத்தியமாகவே தோன்றிக்கொண்டிருக்கின்றனவே அது யாது காரணத்தினாலாகுவதாம் என ஸ்ரீ பகவானிடம் விஜயன் கேட்டனனாம்

பா–69 தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லால்
பரந்தசகம் காரியத்திற் பயன்படாது என்றவரோ

பொ–உரை : பிரம்மமே சத்தியம் சகத்து (மித்தியா) பொய்–என்று உணர்ந்திருக்கும் திட அபரோக்ஷ ஞானிகளுக்கு பரந்த இப்பிரபஞ்ச நாமரூப

காரியங்கள் யாவும் தெரிந்திடும்தான், ஆனாலும் அவரது ஞானப்பார்வையில் தெக்தபடமாய்க்காண்பர்? சுருட்டி வைக்கப்பட்ட கயிறும், மடித்து வைத்த வஸ்திரமும், தீயிட்டு கொளுத்திய பின் அவைகள் முழுதும் எரிந்து சாம்பலாய் இருக்கும் அதனை இப்போது எடுத்துக் கட்டுவதற்கோ அணிவதற்கோ ஆகாது அல்லவா? இதுபோன்று ஞானிகள் பிரபஞ்ச காரியத்தில் சரி ஜெனன மரண சம்பவங்களையும் எரிந்து ஒழிந்த கயிறு வஸ்திரமேயாகப் பராமுகம் கொண்டிருப்பார்கள், என்பதை உனது மதியூகத்தால் உணர்ந்து தெளிவு பெறுவாயாக என்று ஸ்ரீ பகவன் உபதேசித்த இதனை தெக்தபட நியாயம் என்பர்நூலோர்! விசயனுக்கு

பா–70 கன்மவினை அஞ்ஞானம் கடந்தும்அதன் காரியமாய்
புன்மையுறும் மெய்யுடனே போகாதது ஏது எனவே

பொ–உரை : இவ்வநுபவம் வந்தும், தேகாபிமானம் இல்லை இதனைப்பேணுவதில் யாதொரு அகந்தையும் இல்லை இவைகளுக்கான பிரயத்தன முயற்சிகளும் இல்லை அவ்வுடலால் ஏற்படும் செயல்களையும், நான்அல்ல என்னது அல்ல என்று நீக்கியும் இழிவுக்கே இடமான, உலகியல் தேக சுகபோகங்களில் அபிமானம் வைத்த, அதனை நான் எளிதாக அறிந்திடுமாறு உபதேசித்து அருள வேண்டுமென்று காண்டீபன் தாழ்ந்துபோற்றித் துதித்து வணங்கிக் கேட்டனன்

பா–71 வெட்டவிழும் மரம்பசந்து விளங்குதல் போல் சிலகாலம்
நட்டகன்மம் ஆய்ந்தும் அங்கம் நடித்திடும்காண் என்றவரோ

பொ–உரை : வேர்பறித்து வெட்டி சாய்த்துவிட்ட மரமும், அதன் இலைகிளைகள் உடனே காய்ந்திடாமல் சில நாட்கள் வரை பசுமையோடு காணப்படுதல் போல், அபிமானத்தால் அழுந்தி விருப்புடன் செய்கின்ற கருமங்கள் முற்செனன கர்மபயனால் வந்தவுடலைப் பராமரிப்போடு சஞ்சிதவினை அழிந்த போதும் தூலவுடல் பிராரப்தவினை அநுபவிக்கும், அப்போதும் தூலதேகத்தை முன்போல் பராமரிப்பதாக நடித்துச் சஞ்சரிக்கும் என்று அர்ச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் உரைத்தருளினார், (இதனைத் தருசேத ஆர்த்தர நியாயம் என்பர் நூலோர்) காரணம் தீர்ந்த பின்னும் காரியம் சில காலம் இருக்கலாம் என்பது கருத்து

பா–72 சென்மம்போய் முத்தியினைச் சேரச்சிலர் இருக்க
தொன்மை ஆன்மாப்பலவோ சொரூபம் பகரும்என

பொ–உரை : ஆந்மா ஒன்றா அனேகமா என்பது கேள்வி, ஒரு சில பேர்கள் மாத்திரம் சரியாதி கருமங்களை இயற்றியும், சாதன சதுட்டயங்களைச்

செய்தும், பக்குவம் வரப்பெற்று சாயுச்ய கதியினை அடையவும்! வெகுபல பேர்கள் எல்லாமல் பந்தப்பிணிப்பு விலையுள் சிக்குண்டு திரிவதும்? வெவ்வேறாய்ப் பல்வேறு பேதகுண வடிவங்களை உடையதா? ஆன்மாவின் நித்திய பேதாபேதங்களின் வடிவ இயல்பு உண்மைதனை, அடியவனுக்கு உரைத்தருளும் சுவாமி என்று விசயன் ஸ்ரீ பகவானிடம் கேட்டனனாம்

பா—73 பிரமமென்றும் ஈசனென்றும் பெருகுபல சீவரென்றும்
உரைமயக்கம் அல்லதான்மா ஒருவனே என்றவரோ

பொ—உரை : அது எனும் தத்பதார்த்த பதம் இலக்ஷியப் பிரம்மம் என்றும், ஐந்தொழில்களைச் செய்யும், தத்பார்த்த வாச்சிய ரூபனான ஈசுவரன் என்றும், துவம் பதார்த்த பத இலக்ஷியமான கூடத்தர் என்றும், பிரித்து விலக்கி வேறுவேறாய் கூறுவது சாஸ்திரங்களின் யுக்தி தந்திரங்களே அல்லாமல், இந்நான்கு பதங்கட்கும் சாக்ஷியாய்த்திகழும் அதிஷ்டானம்—தலைமை—பிரம்மான்ம சொரூபம் ஒன்று மாத்திரமே—ஏகன்—ஆவன் என்று ஸ்ரீ பகவான் அருளிச்செய்தனராம்

பா—74 ஏகம்தான் ஆன்மா எனும்வகையே மெய்யானால்
ஆகம்தோறும் பலவாய் அமர்ந்தது ஏதோ சொல்லுமென

பொ—உரை : ஆத்மா ஒன்றே என்று கூறும் தன்மையே சத்தியமானால் வெவ்வேறான உயிர்களின் சரீரங்கள் தோறும் தன்மை வேறுவேறாய் ஆத்மா பொருந்தியுள்ள காரணம் யாதுஎனக் கூறியருளும் சுவாமி தேசிகோத்தமனே! என்று அர்ச்சுனன் பணிந்து வினாவினனாம்

பா—75

பலகடத்திற் சலத்தூடு பாநு பிம்பம் தோன்றுதல்போல்
தொலைவில்புத்தி தோறும் ஆன்மாத் தோன்றுதல்காண் என்றவரோ

பொ—உரை : அநேகமாய் வைக்கப்பட்டுள்ள தண்ணீர் நிறைந்த குடங்கள் உள்ளே, வானில் பவனிவரும் சூரியனது பிம்பம் (வடிவம்) தெரிவது போல் எண்ணிமுடியாத சீவர்களின் அந்தக்கரணங்கள் தோறும் பல சூரியர்களும் (வியஷ்டி எனும்) தனித்த நிலையை உடையது, இவர்கள் எல்லாம் பிரதிபிம்பங்களாகும், சமஷ்டி எனும் ஒருமைத்தன்மையது, வானில் வரும் கதிரவன் பரமாத்மா, இதுவே நிஜம் அவைகள் நிழல், இத்தோற்றங்களின் உண்மை நிலைகளைக் காண்டீபனே? மதியூகத்தால் தேர்ந்து தெளிவாயாக என்று ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசித்தருளினாராம்! இதனை, பிம்பப் பிரதி பிம்ப நியாயம் என்று உபநிஜத்துக்கள் கூறுகின்றன, இன்னும், ஆகாயச் சூரியனும் பிம்பமும் பிரம்மமும் ஒன்றே, குட நீருள் தோன்றும் பிரதிபிம்ப

சூரியனும் சீவாத்மாக்களும் பற்பலவேயாம், பிம்பம் ஒன்று பிரதிபிம்பங்கள் அநேகங்களாகும் என்றும் ஸ்ரீ பகவான் கூறியருளினராம்!

பா–76 ஆதித்தன் போல் ஆன்மா அளவில் புத்தி தொறும் தோன்றில்
சாதிக்கும் முக்தி எவர் தமக்கதனைச் சாற்றும் என

பொ–உரை : உபாதியற்ற ஒரு சூரியன் வானில் தோன்றவும், உபாதியை உடைய குடநீருள் காணும் சூரியன் பற்பலவான பிரதி பிம்பங்கள் தோற்றுமது போலவும், எண்ணில் அடங்காத சர்வ உயிர் சார்பான ஆன்மாக்களின் அந்தக்கரணங்கள் தோறும் பற்பலவாகத் தோற்றிடுமானால் இவர்களில் தானதர்ம சிரவாணாதி சாதனங்களால் மோக்ஷம் நரகம் முதலிய பயன்களை யார் யார், எது எதனை அநுபவிப்பார்கள் என்ற விதத்தை, அடியேனுக்கு ஸ்ரீ பகவானே அருளிச் செய்வீர்களாக என்று அர்ச்சுனன் வணங்கி விண்ணப்பித்தனனே

பா–77 பந்தம்முத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்கேயாம்
அந்தபிம்பம் தனக்கில்லை என்று அறிவுவரச் சொன்னவரோ

பொ–உரை : அஞ்ஞானக் கூட்டங்களால் கட்டுப்படுத்துகின்ற பந்தமும், இவைகளினின்றும் விடுபட்ட புத்தி சாதுர்ய பலமான மோக்ஷமும், முன்பு கூறப்பட்ட விசய சுகபோக இச்சைகளில் விரிவாக விரிந்த புத்தியும், அந்தக்கரணங்களின் சீவன் உபாதி இரகிதனாம், அவனுக்கே பந்தமும் முத்தியும் அந்தப் பதமோக்ஷார்த் தங்கள் அனைத்தும், கூட ஸ்தனான, நிர்மல பிரம்ம சொரூபத்திற்கு இல்லவே இல்லை என்று அர்ச்சுனன் புத்தியிற்படும்படி, விஞ்ஞான விவேக சுகபோதத்தை நிலைநிறுத்திட ஸ்ரீ கிருஷ்ணபகவான் இதோபதேசம் செய்தனராம்

பா–78 பரம்ஏகம் ஆகியும் அதில் பலசீவர்கள் ஏது எனவே
ஒருகடலில் பலகுமுழி உதிப்பதுபோல் என்றவரோ

பொ–உரை : இதனை சமுத்தர புத்புத நியாயம் என உபநிஷத்துக்கள் புகழ்கின்ற, அதாவது கடலுள் நீர்நிலை, அலை திவலை நுரை குமுழி சேறு கலங்கள் பாசி எனும் ஏழு உபாதிகள் தோன்றி இருந்து அழிவதும், இதனால் கடல் நீர்நிலைகளுக்கு ஒரு சேதமும் இல்லை என சமாதானம் செய்கின்றார் பெயர்ச்சி உந்து திசை அசைவு நகர்வு, அதிர்வுகளெல்லாம் உபாதி எனப்படும் என அறியவும்.. ஒன்றாயும், அண்டபிண்ட சராசர நாமரூபங்களுடன் புணர்ந்தும் திகழும் அத்வைதப் பிரம்மத்தினிடத்தில், வியஷ்டி வடிவ சராசர நாமரூப சீவர்கள் உண்டானது என்பது எங்ஙனம்? என்று பார்த்தன் கேட்கவும், எங்கும் பரவிக்கிடக்கும் கடலில் வாயுவின்

அசைவுண்டான போது அலை முதலிய உபாதிகள் ஏற்படுவது போல, சுத்தப் பிரம்மாத்மாவினிடத்தில் சர்வ பிரபஞ்சங்களும் சீவர்களும், இவர்களின் சபலசலனங்களால் தங்களைத் தோற்றுவித்துக் கொள்கின்றன என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் உத்தரம்–விடை –கூறியருளினராம்!

பா–79 சீவனது தானன்றும் சேரும்பிரமம் என்றும்
ஆவதுவோ பேரின்பம் ஆங்கது எனக்கு ஓதும் என

பொ–உரை : தனது சொரூபம் சீவன் என்றும், சரியாதிமார்க்கங்களில் மிகவும் முயன்று வழிபட்டு வரவும், தன்னில் வந்து கலந்தது பிரம்மம் என்றும் ஆவதுவோ (ஆண்டான் அடிமை பேதஞானத்தினால் பிறந்து பிறந்து மரிப்பதுவோ) இதுவோ என்னைவிட்டு அகலாத பேரானந்தம்? இக்கலக்கம் முற்றும் ஒழியும் படி அடியவனுக்கு தெளிவுண்டாக அநுக்ரகம் செய்தருள்வீர் சுவாமின் என காண்டீபன் பணிவுடன் கேட்டனனாம்

பா–80 ஏகம் பிரம்மம் இரண்டில்லை நீவேறுமல்ல
சோகமுறும் பேதம்அறில் தோன்றுமின்பம் என்றவரோ

பொ–உரை : எக்காலத்தும் எதனாலும் எப்போதும் நாசமின்றிய பிரம்மம் ஒன்றே உள்ளதாம்! இதினின்றும் வேறான துவைதப் பொருள் என்று ஏதும் இருக்கமாட்டாது, உபாசனையும் கருமமும் பயனும் வேறு வேறு அல்ல, அப்பிரமத்திற்கு அந்நியமாக, இவ்விகமும் அப்பரமும் அனைத்துயிர்களும் ஏன் இங்குள்ள நீயும் நானும் கூட அப்பிரம்ம சொரூபமே! இதனைக் கருதியிராமல், நான் நீ, அது இது, நலம் தீங்கு, துக்கம் சுகம், எனப் பாவித்து இவைகளை தன்னது அல்ல என உன் அகத்தே அமைதி அடைவாயாகில், அந்நொடியில் இருந்தே நீ சர்வானந்தங்களுக்கும் உனது ஆத்மாவே பிறப்பிடம் ஆகுமென, பற்குணனுக்கு ஸ்ரீ பகவான் உபதேசித்தருளினராம்!

பா–81 சீவபேதம் போமோ சித்துஒன்று ஆமோஎனவே
ஆவல்மனம் அறும்சுழுத்தி அவத்கையிற் பார் என்றவரோ

பொ–உரை : ஆரோப மனவிருத்தியாகிய பேதரூப வேற்றுமை எல்லாம் நீங்கிடுமோ சர்வம் சின்மயம் என்ற ஒருங்குணர்வான ஞானபோதம் எனக்கும் உண்டாகுமோ எனப்பற்குணன் கேட்கவும், இதற்குச் சமாதானமாக விருப்பத்தோடும் அநுபவிக்கின்ற இச்சையை உன்மனதில் பற்றி அழுத்திடாமல், நிராசையை அறியச் செய்யும் சுழுத்தி அவத்தை சலனமற்ற நல்லுறக்க நிலையின் தன்மையை நீ ஆங்கே காணமுடியாது? அதன் பராபரமகிமையை விழிப்பு நிலையில் ஓர்ந்து தெளிவாயாகின், உனது எதார்த்த சொரூபங்களுக்கு அந்நியமான கற்பனாஜால வேற்றுமைகள்

எல்லாம் பகலில் ஏற்றிய விளக்கே போல பயனற்றதாய் ஒழிந்திடும், இவ்விபரீத பாவனைகள் ஒழியவே ஆங்கப்போது உணரப்படும் அதுவே, உனது நிஜ ஆத்மஸ்வரூம் என உணர்ந்திருப்பாயாக என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் திருவாய் மலர்ந்து அருளினராம்!

பா—82 பேதமல்ல இவ்வுலகம் பிரம்மமயம் என்றறிந்தும்
பூதமயமாய்த் தோற்றல் போகாதது ஏது எனவே

பொ—உரை : காரிய காரண பேதஞானம் ஒழிந்தும், காரணாதீதமான அபேதஞானம் வந்தும் பஞ்ச பூதக்கலப்பினால் உண்டான நாம ரூபங்களின் தோற்றம் ஏன் இன்னும் நீங்கவில்லை என்று விஜயன் கேட்டனன் நேத்திரங்களால் காணுகின்ற பேத நாமரூபங்கள் எல்லாம், அப்பிரமத்திற்கு அந்நியமாக வந்தது அல்ல பிரம்ம சொரூபமே என்று கூறியும் வித்து, முளை, இலை, பூ, காய், கனி முதலிய பயன்பாடுகளை எல்லாம் நீ கண்டாய், இவைகளில் ஆர்ப்பரித்து உந்திஎழுந்து இவ்வாறாகும் படி நடத்துகின்ற ஒப்பற்ற பிரம்மத்தின் பரிபூரண சத்தியை இன்னும் நீ காணவில்லை கண்டபோது இவைகள் உனக்குச்சுவரில் தீட்டிய ஓவியமே போல நீ அறியலாம் என விஜயனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் அருளிச் செய்தனராம்!

பா—83 கானலை நீரென்று ஓடி கண்டவர்க்குத் தீர்ந்த பின்னும்
வானுலகு நீராகி வயங்குதல்போல் என்றவரோ

பொ—உரை : பாலைவனம், காய்ந்துள்ள பூமிப்பரப்பில் தோற்றும் உஷ்ணக்கிரணம்தனை (தூரத்துப்பார்வையில்) நீரென்றும் விரும்பித்தேடி, அதனைப்பெற்றுப்பருகிட செல்லும்போது, நீரேபோல் அக்கானல் நெருங்க நெருங்க நீர்கிடைக்காமல், மேலும் மேலும் அப்பார்வைக்கு நீர்போலவே தோற்றிக்கொண்டே இருக்கும் அன்றி, பருகிடும் நீர் கிடைக்காது, எவ்வளவு தூரம் போனாலும் பின் இது நீர் அல்ல கானல் நீர் (பொய்த்தோற்றமே) என்று ஐயம் திரிபின்றி கண்டுணர்ந்த பின்பும், வான்வெளியில் மினுமினு என்று திகழும் கானல் நீராகவே இந்த நாமரூபப் பிரபஞ்சம் அனைத்தும் பேய்த்(பொய்த்)தேராகவே விளங்கும், இது உனக்கு(சாமான்யர்கள்) மட்டுமல்ல, 4–5–6 என்ற ஞானபூமிகளை எய்திய சீவன் முக்தர்கட்கும் இப்படியே தோன்றும், ஆயினும் இதன் வாதனைகள் யாவும் அவர்களுக்கு இல்லை என்று அறிந்திருப்பாயாக என்று அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் புகன்றனராம்! இதனை மலைமரீசிகா நியாயம் என்றும் மிருக கிருஷ்ணிகா நியாயம் என்றும் உபநிஷத்துக் கூறியுள்ளன!

பா–84 அறிவானும் நல்லறிவும் அறியப்படும் பொருளும்
பிறிவாய் மூன்றாயிருத்தல் பேதமல்லவொ எனவே

பொ–உரை :அறிகின்றவனும், உண்மைத்தத்துவார்த்த விசயங்களை அறிய விடாமல் மறைக்கின்ற ஆவரணத்தை நீக்கிடும் சிறந்த அறிவும், விசய சுகபோகங்களை அநுபவிக்கமாறான விருப்பமும், என்ற இம்மூன்று(திரிபுடி)விதமாகத் தங்கி உலவுகின்ற புத்திவிருத்தி பேதமல்லவா? துவைத வேற்றுமைப்பாடுகள் அன்றோ? என ஸ்ரீ கிருஷ்ணரின் மென்மலர்ப் பாதங்களில் வீழ்ந்துவணங்கி வினவினான் அர்ச்சுனனே

பா–85

சொப்பனத்தில் தனித்து ஒருவன் தோற்றம்வேறு இல்லை அங்கே
கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போல் என்றவரோ

பொ–உரை : தன்னுடலைக்கிடத்தி நித்திரை செய்யும்போது உடல் பொருள் இவ்வுலகம் யாவும் அதுஅது அந்தந்த எல்லையில் அங்கங்கு இருக்க மனசலனமானவனோ அக்கனவை (அங்கும் காண்பான்? காணப்படுபொருள் எனும் அவத்தையை) காண்கின்றனனா? இல்லை, அப்படியே ஆனாலும் ஆங்கும் அத்திரிபுடிகள் தோன்றிடும், இது கற்பனைவாசனா மனோராஜ்ஜியமாகும். இங்கே காண்பவன் என்ற ஞாதா கூடஸ்சாக்ஷிக்கு அந்நியமான நிழலே போன்றது, இவையாவும் உண்மை அல்ல (நீ–கூடஸ்தன்) என்று, மயக்கம் நீங்கிடுவாயாக என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் விசயனுக்கு உபதேசித்து அருளினராம்!

பா–86 கற்பனையாம் பேதங்கள் காணாமற் போம் வகையை
விற்பனமாய் நானறிய விளம்பும்எனவே வணங்க

பொ–உரை : மனோகற்பனையாகிய பொய்மை தோன்றாத தன்மையினை அடியேன் இவ்விபரீதவித்தைகளையும், இவைகளை நீங்கி நிற்கும் தந்திரங்களையும் மிகத்தெளிவாக நான் உணர்ந்துய்யும்படி விரித்து உபதேசிக்க வேண்டுமெனக் காண்டீபன் வணங்கிக் கேட்டுக் கொண்டனனாம்

பா–87 துரியமாம் யோகத்தால் தூயமனம் லயமானால்
அரியமூவகை விகற்பம் அழியுமென்று சொன்னவரோ

பொ–உரை : சரியை கிரியைகளைப் பேணியும் அதனால் பிராணாயாமம் என்கின்ற அஷ்டயோகம் பயின்றும், இதன்மூலம் மனத்தின் சொரூபத்தை அறிந்தும், பின் இம்மனத்தின் அசைவுகட்கெல்லாம் ஆட்படாமல்,

அதனைத்தனது ஆளுகைக்கு உட்படுத்திடின் அத்வைத பாவனா–தியானம்–ரூப நிற்விகற்பசமாதி அப்யாசத்தினாலும், பிரம்மாகாரமாய் மனோவிருத்தி செய்திடில் அடங்கிடும் அம்மனமும் பிரம்மாகா விருத்தியாய்த் திகழும், இத்தகைய யோகாப்யாசமே நிர்விகற்ப(உடல், பொருள், உணர்வு, உலகியலை பராமுகம் செய்துய்யும்) சமாதிவருமாயின், அக்கணம் அந்த, ஞாதா ஞான ஞேயம் எனும் திரிபுடிகள் மூன்றும் நாசமாகும் என்று, விஜயனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உபதேசித்து அருளினராம்!

ஞாதா–காண்பான், ஞானம் –கண்ட கண், நேயம் காணப்படும் பொருள் என அறிக)

பா–88 சிறந்திருக்கும் ஆன்மாவும் செகம் எல்லாம் நிறைந்திருந்தும்
மறைந்தெனக்கு தோன்றாத வகையேது உரையும் என

பொ–உரை : சத்து சித்து ஆனந்தம் என்ற முப்பதமான சிறப்பு இயல்புகளைப் பொருந்தி உள்ள ஆன்மா! சர்வ உலகமும் (மயிரிடை நுழையாதவாறு) பரிபூரணமாய் எங்கும் நிறைந்துள்ளது என்றீர்சுவாமி? அடியவனின் புத்தியில்படும்படி கண்களுக்குத் தெரியாதவாறு இன்னும் மறைந்து இருக்கின்றனவே, அந்த அதிர்சிய ஸ்வரூபம் இன்னும், எதனால் எனக்குத் தோன்றும் , எதனால் எப்போது என்று இத உபதேசம் செய்தருளும் ஐயனே என்று பார்த்திபன் கேட்னனாம்

பா–89 சத்துச்சித்து ஆனத்நம் தான்மூன்றும் அதனுடனே
ஒத்துற்று நாம உருவம் செகம் ஆகி (இக்கவி–குளகம்)

பொ–உரை : சத்தியத்தன்மையும், யாவற்றையும் விளக்கி அறிகின்ற இயல்பும் எதனாலும் பெயர்ச்சி அடையாத ஆனந்தமும், ஆகிய இம்மூன்றும் ஒருமைப்பாடுடைய ஒப்பற்ற பொருளாகும் ஆன்மா, இவ்வான்ம சொரூபங்கள் மூன்றோடும், உடலோடும் உயிரோடும் மனதோடும் ஞானக்கருவிகளுடனும் தொழிற்கருவிகளோடும் கூடிப் புறவிசயங்களாகித் திரிகின்றன, இன்னும் ....

பா–90

இருக்கையினில் தோன்றாது இவைமூன்றும் பிரம்மம் என
மரிக்கில் வரும் பின் இரண்டும் அறிசகம் என்று உரைத்தவரோ

பொ–உரை: மேற்குறித்துரைத்த அநாத்ம தத்துவங்களின் கூட்டுறவில் கலந்துதுளங்குகின்றதால்(இப்பாகுபாடுகளை பகுத்துணரும் விவேகம் உண்டாகாமையால்) உனக்கு அரியதான தூய ஆத்மாவை தரிசிக்க

முடியவில்லை என அறிவாய்? சச்சிதானந்தமாகிய பிரத்யேக அபின்ன பிரம்ம ஆன்மசொரூபமே நான் என்றும் பின்பு கூறிய வடிவமும் வடிவுக்கேற்ற பெயருமுடைய நாமரூபங்களை மன தினின்றும் பராமுக(நாச) மாக்கிடுவதே, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனும் விசாரணை ரூபபலமாகிய அதிவிஞ்ஞானபுத்தி உதிக்கும், அப்போதே உனக்கு உனது ஆன்ம சொரூபம், உள்ளங்கையில் இருக்கின்ற கனியை பிரத்தியக்ஷமாகக் கண்எதிரே காணமுடியும். இதனை உள்ளிருத்தி ஓர்ந்துணர்ந்து தெளிவு பெறுவாயாக என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினராம்

பா–91 அறிந்துகொள் ஞானத்தாலே ஆன்மாவை என்றுரைத்தீர்
சிறந்துஒளிரும் ஆன்மாவும் திரிசயம் ஆமோஎனவே

பொ–உரை : கையிலிருக்கும் கனியை கண்ணாற் காண்பது போலான அபரோக்ஷ ஞானத்தினால் ஆத்மாவை உணர்ந்திரு என்றருளிச் செய்தீர்கள் சுவாமி, இவ்வாறு நான் உணர்ந்தபோது, சிறந்ததாகிய சச்சிதானந்தப் பொருளினை உள்ளவாறு இவ்வுலக நாமரூப வஸ்துக்களைக் காண்பது போல எனதாத்ம சொரூபம் கண்டு அநுபவிக்கும் படி விளங்கிடுமோ? என அர்ச்சுனன் ஸ்ரீ பகவன் கிருஷ்ணரை வணங்கிக் கேட்டனன்

பா–92 முந்திய ஞானத்தாலே முதிருமஞ்ஞானம் துறக்கில்
சிந்தையில் ஆன்மாச்சுயமாய்த் தோன்றுமென்று சொன்னவரே

பொ–உரை : மாநுடர் எவர்க்கும் கூடவே பிறந்துள்ள சத்துவகுணமே மேலான முதன்மை ஞானமாகும்! இச்சத்துவத்துக்குப் பின்பே வந்துகற்பிக்கப்படுகின்ற பேதஞானமான இரசோகுணமும் மூடம்மூர்க்கமான தமோ குணமுமாகும் இந்த இராஜத தாமச குணங்களினால் தான் உன்னை நீ அறிய முடியவில்லை இடரும் துன்பமும் பிறப்பையும் விருத்தி செய்கின்ற இராஜச தாமச குணங்களின் விருத்திகளில் அபிமானம் அடம் அப்யாசம் முதலியவைகளை விடுவையாகில் அந்தச் சத்துவகுண சொரூபனாய் ஆகுவை அப்போதே உனது ஆத்ம சொரூபம் உனக்கு உள்ளது உள்ளவாறு விளங்கும் இதில் ஏதும் ஐயமில்லை என்று துணிந்திருப்பாயாக என கிருஷ்ணபகவான் கூறி அருளினராம்

பா–93 இனியமுத்திச் சுகமிருப்பது எப்படிஎன் றேவினவ
அநுபவத்தில் அறிவிசய ஆனந்தம் போல் என்றவரோ

பொ—உரை : சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நிலைகளை பயின்று முதிர்ந்த பக்குவர், மற்றும் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்ற ஞானசாதனங்களில் தெளிந்தவர்களும், மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் எனும் சிறந்தபக்குவர்களும், ஏனைய அனைவரும் விரும்பத்தகுந்த மோக்ஷார்த்தம் என்பது எவ்வாறு இருக்கும் என்று விஜயன் கேட்கவும், நாம ரூபங்களாயுள்ள உயிர்சார்பு பொருட்சார்பு உணவுப்பண்டங்களில் ஏதேனும் ஒன்றை அவ்வப்போது விரும்பித்தேடுகின்ற ஒருவன், அவன் விரும்பியது விரும்பியபோது கிடைக்கப்பெற்று அநுபவித்தவுடன் அது அதன் சுகரூப இன்பத்தை அநுபவித்து முடித்ததும், அந்த விசய சுகபோகம் அநுபவித்ததும் மிகச் சாதாரணமாய் திருப்தியுற்று இருப்பது போலவே, நீயும் இம்மோக்ஷார்த்தமான(சீவனம் செய்து கொண்டிருக்கும்போதே) பேரின்பமும் அப்போது சாமான்யமானதாக அறிய முடியும் என்பதையும் நீ அறிவாயாக என்றருளிச் செய்தார் ஸ்ரீ கிருஷ்ணபகவான

பா—94 மனலயம் வந்தவரல்லது மற்றலிரோ முத்தர்என
சனகனைப்போல் சீவர்முத்தர் தாமும் உளார் என்றவரோ

பொ—உரை : பாலப் பருவக் குழந்தைகளின் நிலைமை அறியாமை நிலைகளை சாடி அடக்கிய விவேகம் வந்தமைந்தும், அஷ்டாங்க யோகசித்திகளைத் தன் வசமே செய்துள்ள சீவன்முக்தர்களும் தவிர, வெளிமுகமாய் சர்வ வியவகார காரியங்களைச் செய்கின்றவர்கள் எவரும், இந்த மனம் அடக்குதலில்லாத பேர்கள் யாரும், இந்த சீவன் முக்தி நிலையினை அடைந்தவர்கள் யாரேனும் இருக்கின்றனரா சுவாமி என்று கேட்கவும், ஆமாம் எவரும் பயின்று எளிதில் அடைவதற்கான அரிய (விசயம்) மோக்ஷார்த்தத்தினை, அதிகமான பணிகளின் தொடர்ச்சிகளை லாவக சாமர்த்தியமாய் எதுவும் தம் மனதில் பற்றாதவாறு இருந்து அரசபரிபாலனம் (அநேககாரியங்களை) செய்த ரிஷிகளிற் சிறந்தராஜரிஷி எனப்போற்றப்படுகின்ற ஜனகராஜனும், இன்னும் காரியங்களைச் செய்தும் (பிச்சை ஏற்றுண்டும், உழவுத்தொழிலிருந்து கொண்டும், வியாபாராம் செய்து கொண்டும், சீவன் முக்தராயுள்ளோர்கள் அனேகமாயுள்ளனர் என்பதும் அர்ச்சுனா? நீ அறிந்துகொள்வாய் என்று ஸ்ரீ பகவான் அருளுரை செய்தனராம்

பா—95 சீவன்முக்தி அடைந்தோர்கள் செயலும்அவர் தம்குணமும்
நாவுரைக்கும் வாசகமும் நான்அறியச் சொல்லும்என

பொ—உரை : இவர்கள் உடலோடும் உயிரோடும் உலகியலோடும் கூடிக்சர்வகாரியங்களையும் வெளிமுகமாய்ச் செய்திருந்து கொண்டே, மோக்ஷசாதனங்கள் ஒன்றும் தம்முள் விடாது அப்யாசித்துப் பெற்ற சீவன் முக்தர்கள், சரி இதன்பின்பு இவர்களது, வழக்கங்களான தொழில்களும், குணாதிசய இயல்புகளும் அவர்கள் வசனிக்கின்ற பாங்குகளும், போக்குவரவு இருப்புநிலை இயல்புகள் எவ்வாறு இருக்கும், இவ்வினோத நடையுடை பாவனைகளை நானறியும்படி தேவரீர் உபதேசித்து அநுக்ரகிக்க வேண்டுமென விசயன் நயந்து கேட்டனனாம்

பா—96

வருங்கருவு பிறப்பினோடும் வளர்தல்பருத் தல்குறைதல்
ஒருங்கலும் மெய்க்கென்று அதனைஒறுத்திருப்பார் என்றவரோ

பொ—உரை : முந்தைய சென்மங்களில் செய்தவினைப்பயனை அநுபவிப்பதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்குமே, மாதாவின் கருப்பைக்குள் இருந்து பிறந்துள்ளதே இந்த உடல் என்றும், இதுவும், கருவுள் ஜனித்திருத்தல், பிறந்து வெளிவருதல், நாளுக்குநாள் வளர்ச்சி அடைதல், அவ்வளர்ச்சிக்கேற்ற பருத்து பூரித்தல், தேகம் மெலிவுற்றுச் சுருங்குதல் மரணமென்ற நாசம் அடைதல், என்ற இந்த ஆறு விதமான மாற்றங்களையும் இயல்பாக உடையதே இந்ததேகம் என்று யாது ஒரு கவலையும் இன்றி நிரதிசயம் கொண்டு விளங்குவார் சீவன் முக்தர்கள் என நீயும் இவைகளில் உதாசீனனாய் ஆனந்தம் கொள்வாயாக என்று ஸ்ரீ கிருஷ்ணர் விளக்கி உபதேசித்தருளினாராம்.

பா—97 பார்ப்பதுவும் கேட்பதுவும் பகர்வதுவும் செல்வதுவும்
ஏற்பதுவும், கரணதர்மம், எனத்துணிவார், என்றவரோ

பொ—உரை : ஐந்து ஞானேந்ரியங்களுள் நாமரூபங்களை, கண்கள் காணுகின்றன என்றும் செவிகள் சப்தங்களை எல்லாம் கிரகிக்(கேட்)கின்றன என்றும், வாக்கினால் வசனிக்கின்றன என்றும், பாதங்களினால் போக்குவரவு நடத்தலை செய்கின்றன என்றும், கைகளினால் கொடுத்தல் வாங்குதல் செய்கின்றன என்றும், இந்த ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் அந்தந்த சூச்சும பூதங்களின் அம்சமாயிருந்து இப்பூதங்களின் அதிதேவதைகளால் நடத்தப்பட்டு, அதனதன் தொழில்களைச் செய்கின்றன, இதில் எனது செயல் என்பதேதும் இல்லை என்று பணிவுடன் இவைகளின் பற்றின்றி நிர்விகாரியாய் இருப்பர் சீவன் முக்தர்கள் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறி அருளினராம், மற்றும் இக்கருத்தை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள — பகவத்கீதை எனும்

பரமார்த்த தரிசனம் நூலில் வசனப்படி 3–வது அத்யாயம் 15–வது கவியின் கருத்துப்படியே வந்தது என அறியவும், இவைகளை விரிவாக அறிய விரும்பின் திருமழபாடி ஸ்ரீல ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகள் விளக்கி அருளிய அர்த்த தீபிகை உரையுடன் கூடிய நாநாசீவவாதக்கட்டளை நூலினுள் காணலாம்.

பா–98 பசிதாகம் உயிர்க்கெனவே பயம்துக்கம் சுகம்காமம்
வசிகோபம் மதிக்கெனவே மகிழ்ந்திருப்பார் என்றவரோ

பொ–உரை : பசியைத் தணிக்கின்ற உணவை விரும்புவதும் தாகத்தைத் தீர்க்கின்ற தண்ணீரை விரும்பி தேடுவதும், பிராண வாயுவின் இயக்கத்தால் நடக்கின்றன அன்றி என்னுடையதல்ல? என்றும், பயமும் துன்பமும் இச்சையும், தீமையைத் தருகின்ற கோபமும், அந்தக்கரணங்களின் சுபாவதர்மமே அல்லால் என்னுடையதல்லவே அல்ல என்று மகிழ்வுடன் திகழ்வார்கள் சீவன் முக்தர்கள் என்று ஸ்ரீ பகவான் பற்குணனுக்கு இசைத் தருளினராம் இது குணபேதம் கூறியது என அறியவும்!

பா–99 வீடும் தாரமும் உடனே மேவிஎன்றும் இருந்தாலும்
நீடுந் தாமரைஇலைநீர் நிகராவார் என்றவரோ

பொ–உரை : வாசஸ்தானமான இல்லத்திலும், அங்கு பெற்றோர் மனைவி மக்கள் சுற்றத்தார்கள் நண்பர்கள் என்ற அனைவருடனும் கூடிக் கலந்து குலாவியிருந்து சதா (எப்போதும்) காலமும் வாழ்ந்திருந்தாலும், இவர் இவைகளினால் ஏற்படும் சங்கற்பவிகற்பங்களாலும் விரிந்து பெருகிநிற்கும் நீர்நிலை (தடாகத்துள்)யினுள் தாமரை இலை கிடக்கவும், அவ்விலையை அந்நீருள் அமிழ்த்தி எடுத்த போதும், அப்பத்ம பத்திரத்தின்(தாமரை) மேல்பரப்பினை நீர் நினைப்பதில்லை இலையும் நீரை ஒட்டவிடாது இருக்கின்ற தன்மையே போல் என்று நீ அறிந்து கொள்வாயாக என்று ஸ்ரீ கிருஷ்ணர் அருளிச்செய்தனரே, இதனை கமலபத்திர உதகம் நியாயமென்று உபநிஷத்துகள் புகல்கின்றன,

பா–100 பற்றிடும் காயமும்தானும் பந்நாள் ஒன்று ஆயினும்பின்
உற்றபுளியம்பழமும் ஓடும்ஒப்பார் என்றவரோ

பொ–உரை : எனது செய் கருமங்களின் பயனாய்வந்த தேகமும் (உடல்) நானெனநிற்கும் சச்சிதானந்தமயமான ஆத்மாவும், அனந்த சென்மங்களில் கூடி ஒன்றாய் இருந்தும், மார்கழிதை மாதங்களில் புளியம்பழமானது உள் நரம்புசதை ஓடு மூன்றும் வேறுபாடின்றி பூரித்து ஒன்றாகவே தோன்றிடும்

இது நமக்கு அஞ்ஞானகால அவஸ்தையாகும், மாசி பங்குனி மாதத்தில் புளியம்பழம் உள்ளே விதை சதை ஓடு, மூன்றும் தனித்தனியே (கூடியும் கூடாமல்) இருக்கும் அதுகண்டாய் அன்றோ? இது நமக்கு சீவன் மத்தி அவஸ்தை பக்குவம் அடைந்த இயல்பைக் குறித்துணரச்செய்யும் அதாவது பூ, பிஞ்சு காயிலே பயனில்லை, குறைவு, கனியிலே தான் நிறைந்த பயன்! நீ பக்குவம் அடையாத போது பிஞ்சு, அஞ்ஞான வாசி கனிந்தவுடன் (பக்குவம் நிறைந்தவுடன்) நீ மெஞ்ஞான பண்டிதன் என்றே மகிழ்ந்திருப்பாயாக என்று அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் அநுக்ரகம் செய்தருளினரே!

பா—101 கூறும் உலக இயற்கையுடன் கூடினும்மெய் ஞானம் வந்தோர்
சேறும் பிள்ளைப் பூச்சியும்போல் திரிவார்காண் என்றவரோ

பொ—உரை : இதனைப் பங்க கீடக நியாயம் என்று உபநிஷத் கூறுகின்றன, நிலையாமை அசுத்தம் அநித்தியம் துக்கமயம் என்று சான்றோர்களால் இகழ்ந்துரைத்த இயற்கை உலக சுபாவமான பிரபஞ்சவாசிகளுடன் (அபக்குவர்களுடன்) கூடிக் குலவி வாழ்ந்திருந்த போதும் (சம்பந்தமானவற்றை தன்னுடனே இணைத்துத் தன் மயமாய் ஆக்கியிடும் அளறு (சேறு)தனில், ஒரு விதமான கீடம்(பிள்ளைப்பூச்சிபுழு) சேர்ந்து ஊடுருவி உள் நுழைந்து வெளிவந்த போதும், அப்பூச்சியின் மேனியில் அச்சேறு ஒரு துளியும் ஒட்டுவதில்லை அதுபோலும், இவ்வுலக உயிர்கள் பொருட் சார்புகளில் சார்ந்தும் சாராது இருப்பார்கள், தனது நிஜவடிவினது இயல்பினை உள்ளவாறு உணர்ந்து தெளிந்த சீவன் முக்தர்கள் என்று நீயும் உணர்ந்தும் துணிந்தும் கவலைகள் ஒழிந்தும், உனது கடமைகளை செவ்வையாய் நடத்திடுவாயாக! என்று விஜயனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்து அருளினரே!

பா—102 ததியூடு கடைந்தவெண்ணெய் தான்மோரில் கிடப்பதுபோல்
மதியூடு கூடினும்பின் மயங்கார்காண் என்றவரோ

பொ—உரை : இதனை தக்ர நவநீத நியாயம் என்று உபநிஷத்துகள் புகல்கின்றன, யாதொரு பேதமும் இன்றி பாலில் தயிரும் வெண்ணையும், இருக்க அதனை காய்ச்சிப் பிறைவிட்டு தயிராக்கி பின்மத்தினால் கடையக் கடைய வெண்ணெய் மிதக்கும் அவ்வெண்ணெயை ஒருங்குற உருட்டி அம்மோர்க்கலயத்துள்ளேயே போட்டு வைத்து எவ்வளவு நாளானாலும் அவ்வெண்ணை தயிராகது அம்மோரினுள் கிடந்தபோதும், பாலும் தயிரும், மோரும் கால அவகாசத்தால் கெட்டுப்போகும் அதிலிருந்தும் பிரித்து எடுத்த வெண்ணை எப்போதும் கெடாமல் பெருமையுடன் இருக்குமது போல், சரியாதிகளில் உழன்றும் இதன்பயனால் ஞானசாதனங்கள் அநுஷ்டித்து,

கேட்டல், சிந்தித்தல் தெளிதல் எனும் அகச்சாதனம் கைவரப்பெற்று, இதன்பின் இதனால் சிவன் முத்திப் பதமடைந்த மெஞ்ஞானிகள், தன்னுடலோடும், தனது உயிர் பிராணாதிதர்மங்கள், கர்மேந்ரியம் ஞானேந்ரியம் அந்தக் கரணங்களோடும் இணைந்து இவ்வுலக வாழ்வியலில் உழன்றும், தான் கற்றுணர்ந்து பெற்ற பெரும் வீடுபேற்றின் சொரூப நிச்சயம் நழுவாமல், எதனாலும் எப்போதும் கெடாமல் இருந்து, விதேகமுத்தி பதத்தினை எய்திடுவர் ஞானிகள் என்று விஜயனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உபதேசித்தருளினராம்! என்றவாறு....

பா—103 அருச்சுனன்தன் பொருட்டாக அனைவருக்கும் ஞானம்வரப்
பொருந்திய தேசிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர்

பொ—உரை : போர்க்களத்தில் தேரின் சாரதி(போல்) தேசிக(குரு)மூர்த்தமாய் அமைந்திருந்து, அர்ச்சுனனை (மையமாய் வைத்து) சீடனுக்கு பரப்பிரம்மவஸ்துவின் உபதேச அமிர்த கீர்த்தனமான ஸ்ரீ மத் பகவத்கீதையை முறைமை வழுவாமல், கருமம் கருமாதீதம் உபாசனை(பக்தி) இதினின்றும் விடுபடும் தகைமைகளை உபதேசித்தது அவ்வர்ச்சுனனுக்கு மட்டுமின்றி இவ்வுலகிற் பிறந்து வாழும் உயிர்கள் மாட்டும் சர்வஜன பக்குவர்களும் இந்தஞானமார்க்கத்தைப் பயின்று வீடுபேற்றினை எய்தி உய்யுமாறே, ஸ்ரீ கிருஷ்ணபகவான், அன்று ஆங்கு அர்ச்சுனனுக்கு (ஞான)ஆச்சர்யமூர்த்தியாய்த் தங்கி உபதேசித்த புண்ணியரே கண்வளரீர், என்பது, துயில் கொள்வதற்கானதாகப் பாடியுள்ளபோதும்? கண்=மெய் ஞானக்கண், வளரீர்=விருத்தியடைதல், ஆகவே ஞானக்கண்ணின் பிரகாசம் – ஒளி விரிந்து படர்ந்து அறிந்துய்ந்திடுக என்பதாகும் என அறியவும் என்றனராம்!

பா—104 ஆயர் குலமாதர் அளவிலோரைப் புணர்ந்தும்
தூய பதின் ஆறாயிரவருடந் தோய்ந்து இருந்தும்

பொ—உரை : ஆநிரைகளை (பசுக்களை) பராமரிக்கும் தொழிலைப் பேணுகின்ற இடையர் குலத்தில் உள்ள கோபிகாஸ்திரீகளை (பெண்களை=அறியாமையை இயல்பாய் உடைய சீவாத்மாக்களை) எண்ணிறந்தவர்களையும், பரிசுத்தமான மனதைப்பெற்றுள்ள தேவமாதர்கள் பதினாயிரம் பேர்களையும், சீவாத்மாக்களில் சிறந்த சிவாத்மாக்களை கூடிக்கலந்து புணர்ந்து களித்திருந்தும் (விசயத்தை மறுகவியில் தரும் இக்கவி குளகம் என்பர் நூலோர்)

105–பரம முனிவர்முன்னே பரீட்க்ஷித்தைத் தீண்டிஅன்று
பிரம்ம சரியம் செலுத்தும் போரொளியே கண்வளரீர்!

பொ–உரை : வியாசர் கபிலர் சைமினி போன்ற பெருமைகள் வாய்ந்த முனிவர்கள் கூடியும் மற்றும் பிற தவ சிரேஷ்டர்களும் கலாவல்லவர்கள் நிறைந்ததுமான அவையில் வஞ்சகமாக அசுவத்தமான் விடுத்த அஸ்திரத்தி(அம்பினால்)னால், அபிமன்யுவின் மனைவி உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த பரீஷித்துவின் பிண்டம் உருக்குலைந்திடவும், அதற்கு என்ன செய்யலாம் என அனைவரும் ஆலோசித்திருந்த வேளையில், சுத்தப் பிரம்மச்சாரி ஒருவர் அவளது திரு வயிற்று உந்தியில் தொட்டால் போதும், அக்கரு உருப்பெற்றுக் குழந்தை சுகப்பிரசவமாய் வரும் என்று பெரும் பீடிகையை நிபந்தனையுக்தியைப் போடவும், அங்கு குழுமி இருந்த முனிவர் எல்லோரும், பிரம்மசரியம் காப்பதில் நான் முழுமை பெற்றவன் அல்ல என்று ஒவ்வொரும் தமக்குள்ளேயே சந்தேகித்துக்கொண்டு நீண்ட தாமதம் செய்யவும், ஸ்ரீ கிருஷ்ணரே எழுந்து அவை நடுவே அமர்ந்திருந்த உத்தரை வயிற்றில் தனது அபயஸ்தத்தை வைக்கவும், கரு உருப்பட்டும் அதனால் அவளுக்கு வலியுமின்றி சுகம் பெற்று பின் குழந்தை பரீட்ஷித்தை ஈன்று வந்தாள், ஆங்குள்ள முனிவர்களும் தவ சீலர்களும், முதலில் ஸ்ரீ கிருஷ்ணனின் செயலை பரிகாசம் செய்தும், பின்பு, தம் நடத்தைகளில் ஐயம் கொண்டும் நாணமடைந்தனர், இத்தகைய பெரும் மாண்புகளை ஒருங்கே இயல்பாயுடைய பிரம்மச்சரிய ஆசிர்ம தருமத்தை நிலைநாட்டிய ஸ்ரீ கிருஷ்ணபகவானே கண்வளரீர்!

பா–106 இது கடைகாப்பு ஸ்துதி
ஆதிமூலம் விஜயற்கு ஆதிமறையின் பொருளை
ஓதி உணர்த்தும் இந்த உண்மைதனைக்–காதலுற்றுக்
கற்றோரும் கேட்டோரும் காசினியில் வாழ்ந்துமுக்தி
பெற்றோர்கள் முத்தர்பெறும் பேறே!

பொ–உரை : பிரம்மா விஷ்ணு ருத்திரன் மும்மூர்த்திகளுக்கும் நாயகமாயும், தேசம் காலம் வஸ்து ஆகிய மூன்றுக்கும் மூலகாரணமாக விளங்கும் பரப்பிரம்ம சொரூப இலக்ஷணங்களை எல்லாம், தன்னகத்தே கொண்டு திகழும் பிரம்மமே, சாதன சம்பன்னனான அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் அவனது தேரினை நடத்தும் சாரதியாகவும், ஞானாச்சாரியாகவும், அமைந்திருந்து, புராணங்கட்கும், சாஸ்திரங்கட்கும், உபநிஷத்துகளுக்கும், வேதங்களுக்கும், முதன்மையாய் அத்வைதஸ்வருபமாய் அனைத்திற்கும் முதன்மையாய்த் திகழும் சச்சிதானந்த வஸ்துவின் இலக்ஷண இலக்கணங்களை தொகுத்து விளங்கிடுமாறு காண்டீபனுக்கு அவன் எளிதில் அதிவிரைவில் உணர்ந்துய்வு பெறுமாறு உபதேசித்து அருளினார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா! பரம் பொருளின் இத்தத்துவார்த்த

இதோபதேசத்தின் சாரத்தை (திரண்டபொருளை) தாலாட்டு இசைபிரபந்தமாய் வருணித்து கீதாச்சாத்தாலாட்டு எனும் தலைப்பிட்டு நீங்களும் உய்வு பெறக்கருதியவனா(திருவேங்கடநாதன் எனும் பெயரினை உடையேன்)வேன்.

பிறப்பு இறப்புப் பெரும்பிணி அகற்றி பேரின்ப வீடுபெறச் செய்யும் இவ்வுண்மை உபதேசாமிர்தத்தை, கற்றோரும் கேட்டோரும் புண்ணியம் மிக்கோரும் பழமைப் பண்புகளின் அறம் சார்ந்தவர்களும் ஏனைய மாநுடரினம் அனைவரும் இக்கீதாச்சாரத்தினை ஓதி உணர்ந்திட்டவர் அனைவரும் தம் முடலோடும் உள்ள காலம் வரை இவ்வுலகில், சகல செல்வதேக வாழ்வின் போதே சீவன் முக்தராய் வாழ்ந்து மோக்ஷகதியினைச் சேர்ந்துய்வார்கள் என்பது திண்மையான உண்மையே என, விஜயனை முன்னிட்டு நமக்கும் உபதேசித்து அருளியுள்ளார்கள் என யாவரும் அறிவது நலம் நலமே ஆகும்!

(3ம் நூல்பாடல்கள் 103ம் ஆகமொத்தம் 106 மட்டும்)

மங்கள ஸ்துதிப் பாடல், ஸ்ரீ ஆண்டாள்—அருளியது

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யான் பெறும் சன் மானம்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து ஏலோர்எம் பாவாய்!

இங்ஙனம் உரை பதிப்பு

வெளியீடு, சு— சதானந்தசாமி
ஸ்ரீ சங்கர சதானந்த நிலையம்,
காட்டம்மன் புதூர்— ஆச்சியூர்—(PO)
தாராபுரம் வழி PIN-638673
செல் : 98659 65468


எல்லாம் செயல்கூடும் என்னானை அம்பலத்தே!

ஹரிஓம் தத்ஸத்! கிருஷ்ணார்ப்பணம், சுவாஹா!


ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஓம்



டாக்டர். **C.K.செல்லமுத்து** MJF அரிமா அவர்கள்
தொழிலதிபர். ஏர்செல் டீலர். தாராபுரம்




தொழிலதிபர், திரு. **K.கதிர்வேல்** அவர்கள்
மெரிடியன் டெக்ஸ்டைல்ஸ். கரூர்



திரு. **மருதப்ப ஆசிரியர்** அவர்கள்
ஆசிரியர், தாராபுரம்



திரு.**P.சூரியநாராயணன்**
United India
குடியாத்தம்



மருத்துவர். **ஸ்ரீ சாமி** அவர்கள்
கபிலர்மலை. நாமக்கல்



திரு. **R.ராஜேந்திரன்**
J.E., மின்சாரவாரியம் ஓய்வு.
இந்திராணியம்மாள்
பரிமளா இல்லம், தாராபுரம்




மருத்துவர். **ஸ்ரீ சாமி** அவர்கள்
மனைவி, மகன், மருமகள், பேரன்



உ.பழனியம்மாள்
காட்டம்மன் புதூர்



திரு. **காசி ஸ்ரீ கி.கஞ்சையன்** அவர்கள்
கம்பம்



திரு. **கே.கனகராஜ்** அவர்கள்
கிரி ஆட்டோ பைனான்ஸ்.
கரூர்



S.P.ராஜேந்திரன் B.A.B.L.,
அவர்கள்
வழக்குரைஞர், கோவை - 641 011.



திரு.**S.V.ஈஸ்வரன்**
அவர்கள்
திருப்பூர் - 641 607.



சி.சுப்ரமணி
காட்டம்மன் புதூர்





திரு. **V.இராமமூர்த்தி**
தாராபுரம்




மேஸ்திரி **T.சுப்ரமணி**
காட்டம்மன் புதூர்





















கேப்டன் **T.சக்திவேல்** MBBS., MDDM., அவர்கள்
207, வைகை காலனி, அண்ணாநகர், மதுரை.

திரு. **P. அருள்** அவர்கள்
ஓவியா கிராபிக் பிரிண்டர்ஸ்
7A, வடக்கு காளியம்மன்கோவில் தெரு,
திண்டுக்கல்

டாக்டர். **ஹரிசங்கர்** N.D., அவர்கள்
கீப்பிட் மருத்துவமனை, செனாய்நகர், மதுரை.


ஓம் நமோ நாராயணாய நமஹ!
ஓவியா, திண்டுக்கல். Ph : 2430309